பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 14 திங்கட்கிழமை (26.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

அமைச்சரவையில் மாற்றம்

## அமைச்சர்கள் பலரும் வெளிநாட்டு சுற்றுலா

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை மறுசீரமைப்பு நேற்று இடம்பெற்ற நிலையில் பல அமைச்சர்கள் 23

## கரிக்கோச்சி ரயில் இன்று யாழ் வருகை

(மல்லாவி)

யாழ்ப்பாணத்திற்கு கரிக்கோச்சி புகையிரதம் இன்று வரவுள்ளது. மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் கரிக்கோச்சி 23

## ஓமந்தையில் விபத்து; குடும்பஸ்தர் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பட்டா ரக வாகனம் மோதியதில் சைக்கிளில் சென்ற ஒரு 23

இன்று ஆரம்பமாகின்றது ஜெனிவா அமர்வு

# கூட்டு அரசுக்கு கடும் அழுத்தம்

## இலங்கை தொடர்பாக இரண்டு முக்கிய விவாதம் இடம்பெறும்

(ஜெனிவா) ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் ரணில், மைத்திரி கூட்டு அரசுக்கு கடுமையான அழுத்தம் கொடுக்கப்படவுள்ளது. இலங்கை தொடர்பான முக்கிய இரண்டு விவாதங்களும் இவ்அமர்வில் இடம்பெறவுள்ளது. (23-ம் பக்கம் பார்க்க)

## மூலிகை கண்காட்சி இன்றும், நாளையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினரால் நடத்தப்படும் அனைத்துலக சித்த மருத்துவ மாநாடு இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து நடைபெறும் என ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ம)

தண்ணீர் தாங்கியிலிருந்து

## கீழே விழுந்த இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் தாங்கி ஒன்றின் 45 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்த இளைஞன் ஒருவர் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். 23

## போர்க்குற்றங்களுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

யாழில் இன்று கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்கும் விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையைப் பொறுப்பேற்கக் கோரும் கையொப்பப் போராட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமாகிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதிதேடும் போராட்டத்துக்கு 24

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் விரைவில் அமைச்சரவை மாற்றம்

ஜனாதிபதி மைத்திரி ஆரூடம்



(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மற்றுமொரு கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலும் விரைவில் அமைச்சரவை மாற்றம் நிகழும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத் 23

அமைச்சரவை மறுசீரமைப்பினால்

## அமைச்சர்களின் எண்ணிக்கை 93 ஆக அதிகரித்துள்ளது

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை மறுசீரமைப்பினால் ஏற்கெனவே இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை 93 ஆக அதிகரித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவதுவலவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது முதல் இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சராக இருந்த ரவீந்திர சமரவீர அமைச்சரவை அந்தஸ்துள்ள அமை 23

## அடுத்த தேர்தலில் வெற்றி நிச்சயம்

சந்திரிகா நம்பிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் பெறுபேறுகளில் சுதந்திரக்கட்சிக்கு 23

## காதலன் இறந்த சோகத்தில் காதலியும் உயிர் மாய்ப்பு

(குருமன்காடு)

காதலன் இறந்த சோகத்தில் காதலி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா கொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள விடுதியிலிருந்து நேற்று 23

## ஜெனிவா கூட்டத் தொடர் இலங்கைக்கு பெரும் சவால்



கெஹெலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்திற்கு அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரசாங்கத்திடம் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாது இணை அனுசரணை வழங்கிய தன் விளைவினை இன்று ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித 23

## புதிய அமைச்சரவை மாற்றம் சட்டம், ஒழுங்கு ரணிலிடம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக புதிய அமைச்சரவையில் நியமிக்கப்பட்டுள்ளார். (விரிவான செய்தி 3-ம் பக்கத்தில்)

பொன்சேகாவுக்கு பொலிஸ் அமைச்சு

## இறுதி நேரத்தில் மறுத்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பதவியை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குவது என இரண்டு பிரதான கட்சிகளும் இணக்கம் கண்டிருந்த நிலையில் கடைசி நேரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்கு மறுத்துவிட்டார் என அரச தரப்பு தகவல்களிலிருந்து அறிய முடிகின்றது.

இந்த நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 23

## அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் ஆரம்பம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள மாகாண சபைகள் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றில் கூட்டு எதிர்க்கட்சி உட்பட சகல அரசியல் சக்திகளையும் இணைத்துக் கொண்டு 23



## 76 சதவீத காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பு- இராணுவ தளபதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவத்தினர் வசம் உள்ள காணிகளில் இதுவரையில் 76 சதவீதமான காணிகள் காணி உரிமையாளர்களிடம் கையளித்துள்ளதாக இராணுவத் தளபதி யுதினன் ஜெனரல் மகேஸ் சேனா 23

# யாழ்ப்பாணத்தில் பணியாற்றியமை எனக்கு கிடைத்த வரப்பிரசாதம்

## இந்திய துணைத்தூதர் நடராஜன் பெருமிதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பணியாற்றியதை ஒரு பெரும் வரப்பிரசாதமாக கருதுகிறேன் என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய துணைத்தூதராக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய ஆ.நடராஜன் அவர்கள் இடமாற்றம் பெற்று செல்வதையொட்டி அவருக்கான பிரிவுபசார நிகழ்வு நேற்று இரவு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்று இரவு நடைபெற்ற பிரிவுபசார நிகழ்வில் ஏற்புரை ஆற்றிய போதே ஆ.நடராஜன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் என்றால் அழகு, யாழ்ப்பாணம் என்றால் அன்பு, யாழ்ப்பாணம் என்றால் அறிவு என்பதை நான் பரிபூரணமாக உணர்ந்துள்ளேன். யாழ்ப்பாண மக்களின் இலக்கிய பேச்சுக்களுக்கும், எழுத்தாற்றல்களுக்கும், கலைப்படைப்புக்களுக்கும் ஒரு போதும் குறைவேயில்லை.

யாழ்ப்பாண மக்களை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். எப்போதும் நான் யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வேன் எனவும் ஆ.நடராஜன் மேலும் தெரிவித்துள்ளார்.

இப் பிரிவுபசார நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர் நடராஜனின் சேவையைப் பாராட்டி உரையாற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், அரசியல் அதிகாரிகள், கலைஞர்கள், பொதுத் துறை சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வேலணையில் மாடு கடத்தியவர்களை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் சட்டவிரோதமாக மாடுகளை கடத்தியவர்கள் நேற்று பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அரச நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான லான்ட் மாஸ்ரர் மூலம் மாடுகள் ஏற்றப்பட்டு இறைச்சிக்காக கடத்தப்பட்ட நிலையில் தகவல் அறிந்த பொதுமக்கள் ஒன்று திரண்டு மாடுகளை கடத்தியவர்களை மடக்கிப் பிடித்தனர்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மாடுகளை கடத்திய குற்றச் சாட்டில் இருவரை கைது செய்தனர். மாடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட லான்ட் மாஸ்ரரில் பொறிக்கப்பட்ட அரச நிறுவனத்தின் பெயர் மறைப்புச் செய்யப்பட்டு கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டமை விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை அண்மைக்காலமாக வேலணைப் பகுதி உள்ளிட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் மாடுகள் களவாக வெட்டப்படுவதும் கடத்தப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-9)

காரைநகர்

கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

**ஸ்தாபகதின நிகழ்வு**

இடம்:- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம்:- 01.03.2018 வியாழக்கிழமை (விடுமுறை நாள்) பி.ப 3.00 மணி



சிறப்புப் பட்டிமண்டபம்

"ஈழத்தமிழர் எழுச்சியுற இன்று பெரிதும் அவசியமானது"

இறை உணர்வே! சமூக உணர்வே!

நடுவர்

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்


குறிப்பு:- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து (இல. 11, 1வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) பி.ப 2.15 மணிக்கு ஆரம்பமாகும்.

(C-1695)

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 02 - 08 - 1937

விண்ணில் 08 - 03 - 2017



திதி:-26.02.2018

**கவிஞர் புத்தூர் வே. இளையகுட்டி**

**(ஓய்வு நிலை ஆசிரியர்)**

காப்புயர் தெய்வமாய் கவிஞனாய் கலாபூஷணமாய்
காசினி தன்னில் களிப்புடன் வாழ்ந்தவரே
கூப்பியே தொழுதோம் குவலயம் தன்னில் உங்களை
குன்றுயர் தீபமென என்றும் மிளிர்வீரே

மணற்பகுதி, புத்தூர். -குடும்பத்தினர்

(சி-1713)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 222 7603, 021 567 1592

# சந்திவெளி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் பலியானார். மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆரையம்பதியிலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளை எதிர்த்திசையிலிருந்து வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஆரையம்பதி விபுலானந்தா வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய எஸ்.சஞ்சேகுமார் என்ற இளைஞனே உயிரிழந்தார். 21 வயதுடைய சதீஸ்குமார் என்பவர் படுகாயமடைந்த நிலையில் சந்திவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். பாதசாரிகள் கடப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, மற்றொரு டிப்பர் வாகனம் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ம)

# மணிவிழா வாழ்த்து

26.02.2018

## திருமதி வசந்தா சுப்பிரமணியம்

**(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்- ஆரம்பக்கல்வி, வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி)**



ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின்
வாண்மையினை வலுவாக்கி
வளர்ச்சிக்கு உரமூட்டி
கல்விப் பயிர் வளர்த்திட்ட
காரிகையே!
கருணைப் பெருங்கடலே!
காலம் உள்ளவரை போற்றிடுவோம்
உம்பணியை
வாழிய! வாழிய! வாழியவே!

**இன்று மணிவிழாக் காணும் எமது சக ஆசிரிய ஆலோசகரை மனதார வாழ்த்துகின்றோம்.**

**-சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

(சி-1714)

# மரண அறிவித்தல்

## சிவகுமாரன் புஸ்பலதா

### (கிளி/இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை)



10ஆம் பண்ணை கனகபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் புஸ்பலதா (ஆசிரியை-கிளி/இந்து ஆரம்பப் பாடசாலை) 25.02.2018 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் APR.இராசநாயகம்-புஸ்பதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம்-பத்மாவதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவகுமாரனின் (சிங்கக்குட்டி) பாசமிகு மனைவியும், கிளி/ இந்துக் கல்லூரி மாணவர்களான விதுஷா, ரிதுஷா, கதுர்ஷன், பதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2018) திங்கட்கிழமை நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**10ஆம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி.** (சி-1715)

**தகவல்:கணவன் சிவகுமாரன் (சிங்கக்குட்டி)**

## சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு

# ஐ.நா.பாதுகாப்புச் சபை ஆற்றுப்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

(கொழும்பு)



**பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் இலங்கையால் கைவாங்கப்படவில்லை. அந்தக்கொடூரமான சட்டத்தின் கீழ் கைதான பலர் இன்னமும் தடுப்பிலுள்ளனர். சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆற்றுப்படுத்த வேண்டும் அல்லது குறித்த ஒரு பணிக்காக நியமிக்கப்படும் தீர்ப்பு மன்றம் ஒன்று இலங்கையில் நடந்த சர்வதேச மனிதவுரிமைகள் மீறல் பற்றி ஆராய நியமிக்கப்படவேண்டும் என்று ஒரு கோரிக்கை எம்மிடையே எழுந்துள்ளது எனவும் வலியுறுத்தியுள்ளார்.**

இவ்வாறக் கேள்வி கொழும்பில் இருந்து வந்துள்ளது.

பத்திரிகையாளர் கேள்வி:- அடுத்தவாரம் ஜெனிவாவில் மனிதவுரிமைகள் பேரவையின் அடுத்த கட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. அதுபற்றிய உங்கள் கருத்தென்ன?

பதில்:-2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 30/01 என்ற பிரேரணை ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்டது. அதன் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு பல கடப்பாடுகள் இருந்தன. அவற்றை நிறைவேற்ற இரண்டு ஆண்டு காலம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவற்றை நிறைவேற்றாமலேயே இலங்கை அரசாங்கம் இருந்துவந்தது.

கடந்த மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதற்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியது. பொறுப்புக்கூறலை உள்ளடக்கிய நிலைமாறு கால நீதிப்பொறிமுறையை உருவாக்குவதற்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் அதன்போது வழங்கப்பட்டது. இலங்கையின் அனுசரணையைப் பெறுவதற்காக மேற்கு நாடுகள் அந்தப் பிரேரணையின் காரத்தை பெருமளவுக்குக் குறைத்தன என்பது உங்களுக்குத் தெரியும். சர்வதேச சமூகம் தற்போதைய இலங்கை ஆட்சியாளருக்குச் சாதகமான முறையிலேயே அப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தன. அப்படியும் அரசாங்கம் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டவில்லை.

இப்போது ஒருவருடம் கடந்து விட்டது. அடுத்த வாரம் ஜெனிவாவில் மனிதவுரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகின்றது. ஆனால் இந்த ஒரு வருடத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் எவை நிறைவேற்றப்பட்டன?

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமான அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டு இப்போது ஒன்றரை வருடங்கள் சென்றுவிட்டன. இன்னும் அது செயற்படத் தொடங்கவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் கைவாங்கப்படவில்லை. அந்தக்கொடூரமான சட்டத்தின் கீழ் கைதான பலர் இன்னமும் தடுப்பில் உள்ளனர். பலர் சம்பந்தமாக வழக்குகள் பதியப்படவில்லை. சிறுபான்மையினருக்கு எதிரானஅச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. இன நெருக்கடிக்கான அரசியலமைப்பு மூலமான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையும் தற்போது இல்லை என்றே கூறலாம். நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளையடுத்து கூட்டரசாங்கம் அதனை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில் சர்வதேசம் என்ன செய்யப் போகின்றது? சர்வதேசத்தின் அழுத்தங்களால் மட்டும் தான் இங்கு ஒருமாற்றத்தை ஏற்படுத்தமுடியும். ஜெனிவாவில் மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழர்களுக்கு நீதியைக் பெற்றுக் கொடுக்க சர்வதேச சமூகம் இனியும்தாமதிக்கக்கூடாது.

அமெரிக்காவில் இருந்து வந்த நிஷாபிஸ்வாலிடம் ஐ.நா. மீண்டும் இரு வருடங்கள் தவணை கொடுப்பதைப் பற்றி எனது ஆட்சேப னைகளை சென்ற வருட ஆரம்பத்தில் தெரிவித்த போது தமிழர்களை ஒருபோதும் அமெரிக்கா கைவிடாது என்றார். இப்பொழுது அவரும் பதவி இழந்துவிட்டார்.

எமது பெரும்பான்மையின அரசாங்கம் நெருக்குதல் இல்லாவிட்டால் ஒருபோதும்எமது உரிமைகளைத் தரமுன்வராது என்பதே எனது கருத்து. நியாயமான முறையில் போர்க்குற்றங்களை விசாரிக்க அரசாங்கம் முன்வராது. எந்தளவுக்கு நெருக்குதல்களை பிற அரசாங்கங்கள் உண்டுபண்ணுவன என்பது நாம் அவர்களுடன் சேர்ந்து பேசி ஏற்படுத்த வேண்டியதொன்று. காலங் கடந்தால் "ஆறின கஞ்சி பழங்கஞ்சி" ஆகிவிடும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை ஐ.நா.பாதுகாப்புச்சபை ஆற்றுப்படுத்த வேண்டும் அல்லது குறித்த ஒரு பணிக்காக நியமிக்கப்படும் தீர்ப்பு மன்றம் ஒன்று இலங்கையில் நடந்த சர்வதேச மனிதவுரிமைகள் மீறல் பற்றி ஆராய நியமிக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கை எம்மிடையே எழுந்துள்ளது.

- ஐ.நா மனித உரிமைகள் மன்றத்தின் செயலாளர் நாயகத்தின் கருத்தின் அடிப்படையிலேயே அவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்கமுடியும் என்று கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதிய அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

புதிய அமைச்சரவை மறுசீரமைப்பின் கீழ் ஆறு புதிய அமைச்சர்களும் மூன்று இராஜாங்க அமைச்சர்களும், பிரதியமைச்சர் ஒருவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். இப்பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர்களின் விபரம் பின்வருமாறு,

அமைச்சரவை அமைச்சர்கள்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சர்

லக்ஷ்மன் கிரியெல்ல - அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்

கபீர் ஹாசிம் - உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர்

சாகல ரத்நாயக்க - இளைஞர் விவகாரம், தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

ஹறின் பெர்னாண்டோ- தொலைத்தொடர்பு, டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

ரவீந்திர சமரவீர - பேண்தகு அபிவிருத்தி, வன ஜீவராசிகள் அமைச்சர்

இராஜாங்க அமைச்சர்கள்

பியசேன கமகே - இளைஞர் விவகாரம், தெற்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

அஜித் பி பெரேரா - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, போதைப்பொருள் ஒழிப்பு, சமூக மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

ஹர்ஷ டி சில்வா - தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

பிரதி அமைச்சர்கள்

ஜே.சி.அலவத்துவல- உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர். (இ-7)

## ரவி அமைச்சராக நியமிக்கப்படவில்லை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றத்தின் போது முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் அமைச்சராக நியமிக்கப்படவில்லை.

ரவிகருணாநாயக்க அமைச்சராக நியமிக்கப்படுவது பொருத்தமானது என ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்திருந்த போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த அமைச்சர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் ரவி கருணாநாயக்கவின் பெயர் இடம் பெறவில்லை.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தில் ரவி கருணாநாயக்கவின் பெயர் பேசப்பட்டதன் காரணமாக, அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்த விவகாரம் தொடர்பாக பின்னர் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் ரவி மீது நேரடியாக குற்றம் சுமத்தப்படவில்லை.

ரவி கருணாநாயக்க மீது குற்றம் சுமத்தப்படாமை மற்றும் அவர் குற்றவாளி என அறிவிக்கப்படாத நிலையில், அமைச்சராக நியமிக்கப்படாதது அநீதியானது என ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கூறியுள்ளனர். (இ-7)

## பரபரப்பான இறுதி ஓவரில் கண்ணன் அபாரம்

# அரியாலை சனசமூக நிலையத்தை வீழ்த்தி சம்பியனாகியது நொதேன் வி.கழகம்

கண்ணனின் அசத்தலான பந்துவீச்சு கைகொடுக்க பரபரப்பான இறுதி ஓவரில் அரியாலை சனசமூக நிலைய அணியை 3 ஓட்டங்களால் வீழ்த்தி சொந்தத் தொடரில் சம்பியனாகியது நொதேன் விளையாட்டுக் கழகம்.



சம்பியனான நொதேன் விளையாட்டுக் கழகம்

நொதேன் விளையாட்டுக் கழகம் நடத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 23 வயதுக்குட்பட்டோருக்கான அணிக்கு 7 பேர் 6 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று கழக மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய கிரிக்கெட் அணியை எதிர்த்து நொதேன் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்ற அரியாலை சனசமூக நிலைய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நொதேன் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சாரந்தன் 2 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 23, பிரசாந்தன் ஒரு ஆறு ஓட்டம், ஒரு நான்கு ஓட்டம் உட்பட 18, தேவகுமாரன் ஒரு ஆறு ஓட்டம், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

62 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 6 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இறுதி ஓவரில் அரியாலை சனசமூக நிலைய அணிக்கு 4 ஓட்டங்கள் மாத்திரமே வெற்றிக்கு தேவையாக இருந்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் அபாரமாக பந்துவீசிய கண்ணன் ஒரு ஓட்டத்தினை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றி நொதேன் அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இவரே போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

இவ் மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யூனியன் வங்கியின் வடக்கு, கிழக்கு பிரதேச முகாமையாளர் நிசாகரன், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



போட்டியின் ஆட்டநாயகன் கண்ணனுக்கு நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன் விருது வழங்கி கௌரவிக்கிறார்.



2ஆம் இடத்தைப் பெற்ற அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்



## ரெய்லரின் சதத்துக்கு பின் சான்ட்னரின் அதிரடி கைகொடுக்க

# ஹமில்டன் த்ரில்லரில் நியூசிலாந்து வெற்றி

றோஸ் ரெய்லரின் சதமும இறுதி நேரத்தில் சான்ட்னரின் அதிரடியும் கைகொடுக்க, இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று ஹமில்டனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்ஸன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### பட்லர் அரைச்சதம்

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ் (4) ஏமாற்றினார். ஜேசன் ரோய் (49) அரைச்சத வாய்ப்பை இழந்தார். அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (8), பென் ஸ்ரோக்ஸ் (12) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய ஜோ ரூட் (71), ஜோஸ் பட்லர் (79) அரைச்சதம் கடந்தனர். மொயின் அலி (28) நிலைக்கவில்லை.

50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களை எடுத்தது. வில்லே (11) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் போல்ட், சான்ட்னர், சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

### ரெய்லர் அபாரம்

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு முன்ரோ (6), அணித் தலைவர் வில்லியம்ஸன் (8), மார்டின் கப்டில் (13) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய ரொம் லெதம் அரைச்சதம் கடந்தார்.

நான்காவது விக்கெட்டுக்காக றோஸ் ரெய்லருடன் இணைந்து 178 ஓட்டங்களை பகிர்ந்திருந்த லெதம் (79), ஸ்ரோக்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நிகோல்ஸ் (0), கிராண்ட்ஹோம் (2) நிலைக்கவில்லை.

அபாரமாக ஆடிய றோஸ் ரெய்லர் சதம் கடந்தார். இவர் 113 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அடில் ரஷித் பந்தில் ஆட்டமிழந்தார். வோக்ஸ் பந்தை சிக்சருக்கு அனுப்பிய சான்ட்னர், வெற்றியை உறுதி செய்தார்.

நியூசிலாந்து அணி, 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (287) 3 விக்கெட்டுக்களால் அடைந்தது.

சான்ட்னர் (45), சௌதி (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் வோக்ஸ், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ் வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சதமடித்து நியூசிலாந்தின் வெற்றிக்கு கைகொடுத்த றோஸ ரெய்லர் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி மவுன்ட் மவுன்கனுய் நகரில் நடக்கிறது.




## ஹோலி, தோனிக்கு ஓய்வு: இந்திய அணி அறிவிப்பு

முத்தரப்பு 'ரி20' தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியில் வழமையான அணித் தலைவர் விராத் ஹோலி, தோனி உள்ளிட்டோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு 'ரி20' தொடர் வரும் மார்ச் 6-18 வரை கொழும்பில் நடக்கிறது. இதற்காக 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் வழமையான அணித் தலைவர் விராத் ஹோலி, முன்னாள் அணித் தலைவர் தோனிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. தலைவராக ரோகித் சர்மாவும் துணைத் தலைவராக ஷிகர் தவானும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்க தொடரில் பங்கேற்ற வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமார், ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யாவுக்கு பதிலாக தமிழக 'சகலதுறை வீரர் விஜய் சங்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'சைனாமேன்' சுழற்பந்துவீச்சாளர் குல்தீப் யாதவ் இடம்பெறவில்லை.

இளம் வீரர்களான ரிஷப் பண்ட், வாஷிங்டன் சுந்தர், மொஹமட் சிராஜ், தீபக் ஹூடாவுக்கு இடம் கிடைத்துள்ளது.

### அணி விவரம்

ரோகித் சர்மா (தலைவர்), ஷிகர் தவான் (துணைத் தலைவர்), லோகேஷ் ராகுல், சுரேஷ் ரெய்னா, மணிஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), ரிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), தீபக ஹூடா, வாஷிங்டன் சுந்தர், சகால், அக்சர் படேல், விஜய் சங்கர், ஷர்துல் தாகூர், உனத்கட், மொஹமட் சிராஜ்.

# இந்துமத வழிபாட்டுத்தலங்கள் சேதமாக்கப்படுவதை கண்டித்து மன்னாரில் நாளை மாபெரும் கவனயீர்ப்பு பேரணி

(மன்னார்)

இந்து சமயத்தவரின் வழிபாட்டு தலங்களை சேதப்படுத்துவதை கண்டித்து மன்னார் மாவட்ட இந்து மகா சபையின் ஏற்பாட்டில் மாபெரும் கவனயீர்ப்புப்பேரணி ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் லிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து மன்னார் வீதி ஊடாக நகர்ந்து மன்னார் மாவட்ட செயலக்த்தை சென்றடையவுள்ளது.

வடக்கில் உள்ள இந்துக்களின் வழிபாட்டு தலங்கள் தொடர்ச்சியான முறையில் சேதமாக்கப்பட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக விசமிகளால் இந்துக் கோவில்களில் உள்ள சிலைகள், விக்கிரகங்கள் அடித்து உடைக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் வருகின்றன.

அண்மையில் சிவராத்திரி தினத்தன்று மன்னாரில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் தொடர்ச்சியான முறையில் இடம்பெற்ற விசமத்தன செயற்பாடு இந்துக்கள் அனைவரையும் பெரும் வேதனைக்குட்படுத்தியிருந்தது.

இச்செயலுக்கு பல இந்து சமய அமைப்புக்கள் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கேட்டிருந்தனர்.

ஆனால் அதன் பின்னரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த விசமத்தனமான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

எனவே இச் செயலை கண்டிக்கும் வகையில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் பேரணியின் நிறைவில் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-9)

# மகிந்த மீதான விமர்சனமே தோல்விக்குக் காரணம்

## அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான விமர்சனமே உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்விக்குக் காரணம் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த அமரவீரவின் இல்லத்தில் சுதந்திரக் கட்சி சார்பில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியுற்றதற்கு கட்சியில் ஒரு சிலரின் பேச்சுக்களே காரணம். அவர்கள் தேவையற்ற விடயங்களை பேசி கட்சியை தோல்விப் பாதையில் இட்டுச் சென்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டும்.

அவரின் குடியுரிமையைப் பறிக்க வேண்டும் என்பன போன்ற பேச்சுக்கள் அவ்வாறான சிலவாகும்.

அதனை நான் கூட விரும்பமாட்டேன். முன்னாள் ஜனாதிபதி மீது எங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் எந்தப் பகையும் இல்லை.

இவ்வாறான நிலையில் சாதாரண பொதுமக்கள் சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகளின் அநாவசிய பேச்சுக்கள் காரணமாக மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்கும் நோக்கில் அவரின் கட்சிக்கு பாரியளவில் வாக்களித்துள்ளார்கள்.

ஆனால் இந்த வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற போதுமானதல்ல.

நாங்கள் பொது வேட்பாளராக போட்டியிட்டால் மகிந்த தரப்பில் யார் போட்டியிட்டாலும் 45 வீத வாக்குகளைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவே முடியாது என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

# அமைச்சர் சுசில் டபிள் கேம்



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தமது கட்சியின் தனி அரசாங்கம் ஒன்றை ஆட்சியில் அமர்த்த முயற்சித்ததுடன் ஜனாதிபதிக்கும் அழுத்தங்கள் கொடுத்தனர்.

நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்த அமைச்சர்கள் இருந்து வந்ததுடன் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவே இதில்முன்னின்றுசெயற்பட்டார்.

மகிந்த தரப்பினரின் ஆதரவை பெற்றாவது ஆட்சியமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர்.

மேலும் சுதந்திரக்கட்சியின் ஆட்சியை ஏற்படுத்த முடியாது போனால், அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டும் எனவும் அவர்கள் கூறியிருந்தனர்.

சுசில் பிரேமஜெயந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்பத்தில் இருந்தே ராஜபக்ஷவினருக்கான ஆதரவு கொள்கையை கொண்டிருந்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் முடிவுகளை பகிரங்கமாக விமர்சித்தார்.

அமைச்சர் பதவிகளை கைவிட்டு, எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டும் என்று பகிரங்கமாக கூறும் சுசில் பிரேமஜெயந்த, இரகசியமான முறையில் தனது அமைச்சு பதவியை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்துள்ள சுசில் பிரேமஜெயந்த ஜனாதிபதியுடன் பேசி தனக்கு மற்றுமொரு அமைச்சை பெற்று தருமாறு கேட்டுள்ளார்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள் அமைச்சராக கடமையாற்றி வரும் சுசில், இதற்கு மேலதிகமாக மேலும் ஒரு துறையை வழங்குமாறு கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சிக்கு செல்வதால், எந்த நன்மையும் இல்லை என்பதால் அப்படியான எண்ணம் இல்லை எனவும் சுசில் கூறியுள்ளார்.

பதவியை கேட்டு ஜனாதிபதியிடமோ, வேறு எவரிடமோ மண்டியிடப் போவதில்லை எனவும் முடிந்தால், தனக்கு மற்றுமொரு அமைச்சு பதவியை பெற்று தருமாறு சுசில், மகிந்த அமரவீரவிடம் கோரியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபசெலவுகள் கூடும்.

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, ஆனந்தமான நாள்.

**மிதுனம்:** நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்; ரோக பயமுண்டு, தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**மகரம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.

**இராசி பலன்**

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| சூரி, புத, சுக் | கிரகநிலை | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு, செவ் | | |

சந்திராஷ்டமம்
பூராடம்
இரவு 10.08 மணிக்கு
கடக-சந்

**26.02.2018**

மாசி 14, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

ஏகாதசி பிற்பகல் 3.24 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 4.21 மணிவரை

சுபநேரம் 12.29-1.59 மணிவரை

இராகுகாலம் 7.59-9.29 மணிவரை

ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்:** தடைகளைத் தவிர்த்து தன்னிறைவு காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. வித்தியாலயத்தின் அதிபர் யோக.தயாளன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், கௌரவ விருந்தினராக திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகனராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் மாணவர்களின் கலாசார நடனங்களுடன் நடைபவனியும் இடம்பெற்றன.

(படங்கள்: சோபிகா, புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



யாழ்.இந்துக்கல்லூரியின் சாரணிய நூற்றாண்டு நிறைவு விழா குழுத்தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

# மண்டான் வீதி அருகே கொட்டப்படும் கழிவுகளால் பொதுமக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

மத்தொனி தெற்கு மண்டான் வீதி அருகே கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதியை அண்டியுள்ள பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.


குறித்த வீதியோரமாக அனுமதியின்றி வீசப்படும் கழிவுப்பொருட்களால் கரவெட்டி மத்தி, கரணவாய் கிழக்கு பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வீதிக்கு அருகில் போடப்படும் மரக்குற்றிகள் கழிவுப் பலகைகள் என்பவற்றால் வீதிப் போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளது.

மேலும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதால் அப்பகுதியில் போடப்படும் கழிவுப்பொருட்கள் பரவலாக அனைத்து இடங்களுக்கும் இழுத்துச் செல்லப்படுகின்றன.

அப்பகுதியில் உள்ள நன்னீர் கிணறுகள் மாசடைந்து காணப்படுவதால் இலையான்.நுளம்பு போன்ற பூச்சிகள் படையெடுத்து குடியிருப்புக்களுக்குள் வருகின்றன. இதனால் தொற்று நோய்கள் இலகுவில் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது.

விலங்குகளின் எலும்பு எச்சத்தை நாய்கள் எடுத்து வந்து ஆலயங்களில் போடுவதால் புனிதத்தை பேண முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக அப்பகுதியில் உள்ள பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் பல தடவை அறிவித்தும் உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

மக்கள் குடியிருப்பு இல்லாத வேறு ஒரு இடத்தை தெரிவு செய்து கழிவுகளை கொட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்தொனி கிராம அபிவிருத்தி சங்க தலைவர் அ.ஸ்ரீகரன் பொதுமக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9)



யாழ்.நவாலி ஸ்தான அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.


# சைவசித்தாந்த சைவத்திருமுறை பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் இளந்தொண்டர் சபையில் இயங்கிவரும் திருவாவடுதுறை ஆதீனசைவ சித்தாந்த - சைவத் திருமுறைப் பயிற்சி நெறிகளின் புதிய அணிகள் 2018.03.04 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்தின் சித்தாந்தரத்தினம் பட்டத்திற்குரிய நேர்முகப் பயிற்சியும் திருமுறைநெறிச் செல்வர் பட்டத்திற்குரிய நேர்முகப் பயிற்சியும் ஓராண்டு பாடத்திட்டத்தில் நடைபெறும். மாதந்தோறும் முதலாம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நேரமாக நடைபெறும். இந்த நேர்முகப் பயிற்சியைப் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். இப் பயிற்சி நெறிகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறுகின்றன.

விண்ணப்பத்தை ஆ.திருநாவுக்கரசு, இணைப்பாளர், சைவசித்தாந்தப்பயிற்சி மையம், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு எனும் விலாசத்திற்கு அனுப்பலாம். அல்லது 021 224 1446, 077 371 3864 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவும் பெயர்களைப் பதிவு செய்யலாம் என இணுவில் இளம் தொண்டர் சபை பயிற்சி மைய இணைப்பாளர் திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (இ)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பியந்த தலைமையில் பொலிஸ் அணிவகுப்பு, பொலிஸ் வாகனப் பரிசோதனை என்பன நடைபெற்றன.

(படங்கள்: மகாலிங்கம்)

# மயிலிட்டி துறைமுக அபிவிருத்தி குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மயிலிட்டித்துறைமுகமானது பல வருடகாலத்திற்கு பின்னர் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு அபிவிருத்திப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.



கடந்த திங்கட்கிழமை குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே நாட்டின் தூதரக அதிகாரிகள் மற்றும் யு.என்.டி.பி. பிரதிநிதிகளை வரவேற்ற தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவஸ்ரீ குறித்த துறைமுகத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அப் பகுதியில் எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள செயற்றிட்டங்கள், அதற்கு தேவையான உதவிகள் குறித்து நோர்வே நாட்டு தூதரக அதிகாரிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். (இ)

# யோகநாத சுவாமிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

ஹவாய் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் ஏற்பாட்டில் அமெரிக்க ஹவாய் போதிநாத வேலன் சுவாமிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு வருகை தந்து விசேட சர்மாட்சனை பூசையிலும் கலந்து கொண்டு பக்தர்களுக்கு ஆசிர்வாதம் வழங்குவார். (10)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய துறையினர் மற்றும் சங்கானை பிரதேச வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 7 மணியளவில் சங்கானை பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (10)

# சைவர்களின் வழிபாட்டிடங்கள் தாக்கப்படுவதை நிறுத்த மனிதத்தை நேசிக்கும் அனைவரும் மன்னாரில் நாளை அணிதிரளுங்கள்

## சைவ மகா சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சைவர்களின் வழிபாட்டிடங்கள் தொடர்ந்து தாக்கப்படும் துயர நிலையை நிறுத்த தாய் மதத்தை மனிதத்தை நேசிக்கும் சகலரும் மன்னாரில் அணிதிரளுமாறு அகில இலங்கை சைவ மகா சபையின் பெருந்தலைவர், தவத்திரு அகத்தியர் அடிகளார், கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

சிவபூமி என வர்ணிக்கப்படும் எமது நாட்டில் கடந்த சில காலங்களாக சைவத் தமிழர்களின் வழிபாட்டிடங்கள் காட்டுமிராண்டித்தனமாக (தெய்வச் சிலைகள்) உடைக்கப்பட்டு தாக்கப்பட்டு வருகின்றன .

அதிலும் குறிப்பாக மன்னாரில் பாடல் பெற்ற சைவத் தமிழர்களின் தொல்லியல் மரபுரிமைச் சொத்தான திருக்கேதீச்சரம் அமைந்துள்ள அதி உன்னத சிவபூமியில் தொடர்ச்சியாக பல தெய்வ விக்கிரகங்கள் மிக மோசமாக சிதைக்கப்பட்டு வழிபாட்டிடங்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டு புனிதத் தன்மைக்கு ஊறுவிளைவிக்கப்பட்டு வருகின்ற நிலை முழுச் சைவத் தமிழ் சமூகத்தையும் கவலைக்கு உள்ளாக்கியிருக்கின்றது



இந்நிலையில் மன்னார் மாவட்ட இந்து மகா சபையால் நாளை செவ்வாய்க்கிழமை லிங்கேச்சரத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கவனயீர்ப்பு போராட்டத்தில் பிரதேச வேறுபாடு இன்றி அனைத்து சைவத் தமிழர்களையும் கலந்து தாய்மதத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

அதே நேரம் அன்பையும் கருணையையும் போதிக்கின்ற மதங்களிடையே பிளவை தூண்டும் இச்செயற்பாடுகளை அனைத்து மதத் தலைவர்களும் ஒருமித்து கண்டிக்க முன்வர வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.


நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், வடக்கின் முதலமைச்சர், இந்து கலாசார அமைச்சர் ஆகியோர் இவ்விடயத்தில் நேரடி சிரத்தை எடுத்து சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாமலிருக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டு நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதியின் அறிவுரை



(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.




தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இந்த வாழ்த்துக்களை மைத்திரி பதிவிட்டுள்ளார்.

தொடர்ந்து அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நான் வாழ்த்துகிறேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையில் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு இந்த மாற்றங்கள் நம்மை பலப்படுத்தும்" என பதிவிட்டுள்ளார். (இ-7)

உ
சிவமயம்
"அமெரிக்க ஹாவாய் ஆதீன முதல்வர்"
சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின்
அளவெட்டி வருகை
காலம்
27.02.2018 செவ்வாய்க்கிழமை
காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை
இடம்
ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில்
(ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம், அளவெட்டி)
அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில்

அன்புடையீர் வணக்கம்,

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம ஸ்தாபகரும் அமெரிக்காவிலுள்ள சர்வதேச பெருமைமிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடரும் தற்போதைய ஆதீன முதல்வருமாகிய சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 65 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரையாக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார். சுவாமிகளும் அடியவர்களும் 27.02.2018 (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிக்கு பசுபதீஸ்வரர் திருக்கோயில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள். பின்னர் 10.00 மணிக்கு அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலிலும் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள். அத்தருணம் அனைவரும் இந்த பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதோடு மதியம் நடைபெறும் அன்னதானத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
நிர்வாகம்,
பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம்.

(2882)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 72 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BScIT, SLTIT/ சொந்தத் தொழில்<br>தொ.இ: B/7533 | பிறப்பு: 1986 RC<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/6635 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L மலேசியா<br>தொ.இ: B/7536 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ அரசதொழில்<br>தொ.இ: G/6638 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 25 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: B/7537 | பிறப்பு: 1980 RC<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6643 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>தகைமை/தொழில்: A/L/பூசகர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7538 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6644 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கொடிய யுத்தத்தின் விளைவாக எம்மில் பலர் மாற்றுத்திறனாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(பரந்தன்)

**வடக்கு மாகாணத்தில் நடந்து முடிந்த கடுமையான யுத்தத்தின் விளைவாக இப்பகுதி மக்களில் மிகக் கூடுதலானவர்கள் குறிப்பாக இளைஞர், யுவதிகள் உடல் உறுப்புக்களை இழந்தவர்களாக, தமது தொழில் முயற்சிக்கான வழி வகைகள் எதுவுமின்றி திண்டாடிக் கொண்டிருக்கின்ற மாற்றுத் திறனாளிகளாக பல தரப்பட்ட மக்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**







போரினால் பாதிப்பிற் குள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி வாழ் மக்களின் நலன்கருதி வடக்கு மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் நேற்றும் இன்றும் அந்தந்த மாவட்டங்களில் மாபெரும் நடமாடும் சேவை நடைபெற்றது.

இதில் நேற்றைய தினம் கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரியில் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் சேவை நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

இம் மக்களில் பலர் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் எனது அலுவலகத்தில் என்னை சந்தித்து தமது துயர சம்பவங்களை எடுத்துக் கூறுகின்ற போது மனம் வெதும்புகின்றது.




இவர்களுக்கான உதவிகளை விரைந்து நல்குவதற்கு மனம் ஏவுகின்றது. ஆனால் நிதி நிலைமைகள் ஏற்புடையதாக அமையவில்லை. இருப்பினும் எமக்குக் கிடைக்கக்கூடிய அற்ப சொற்ப நிதிகளில் இருந்து குறிப்பிட்ட சிலருக்கான உதவிகள் வழங்கப்பட்டுவருகின்ற போதும் அவை போதுமானதாக இல்லை. இந்நிலையில் வடக்கு மாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் மத்திய அரசில் உள்ள சம்பந்தப்பட்ட திணைக் களங்களுடன்இணைந்து இன்று இந்த நடமாடும் சேவையை முன்னெடுத்துள்ளனர்.

வகைதொகையற்ற மக்களை கொன்று குவிப்பதற்கும் விசேட தேவைக்குட்பட்டோர் ஆக்குவதற்கும் மூல காரணமாக இருந்த மத்திய அரசு யுத்தம் முடிந்த பின்னரும் இவ்வாறு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு விரைந்து உதவிகளை நல்க முன் வராதிருப்பது மிகப் பெரிய குறையாக எம் மக்களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக இனம் காணப்பட்டுள்ள ஒரு சமூகம் தமது சுய உரிமைகளுடன், வாழ்வியல் அடையாளங்களுடன், சுய கௌரவத்துடன் தமது மண்ணில் வாழ்வதற்கு தடைவிதிக்கக்கூடிய அல்லது தடுத்து நிறுத்தக்கூடிய செயல்களையே மத்திய அரசு தொடர்ந்தும் செய்து கொண்டு வருகிறது. உண்மையில் அப்பாவி சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் போட்டி பொறாமை இல்லை. வன்மம் இல்லை. ஆனால் சொந்த இலாபம் கருதி எமது அரசியல் வாதிகள் எமது அப்பாவி மக்களை திசை திருப்பி முரண் வழி நோக்கித் துரத்துகின்றார்கள். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

மக்களிடையேயான நல்லெண்ணமும் சௌஜன்யமும் சீர்குலைந்துள்ளது. அடாவடித்தனமும் வன்முறையும் மக்கள் மனதில் விதைக்கப்பட்டுள்ளன. இந்த நிலை மாற வேண்டும். சிங்கள மக்கள் தமிழ் மக்களின் கரிசனைகளை, பிரச்சினைகளை உணர்ந்து கொள்ள நாம் வழிவகுக்க வேண்டும். மன மாற்றத்திலும் புரிந்துணர்விலுந்தான் எமது விடிவு தங்கியிருக்கின்றது.

சிறுபான்மை இனங்களின் நலனில் அக்கறை கொள்ளக் கூடிய ஒரு அரசியல் கலாசாரம் அல்லது ஆட்சியாளர்களின் மனமாற்றம் ஏற்படும் வரை எமது நிலைமைகளில் முன்னேற்றம் காண முடியாது. ஆகவே அரசுடனான அரசியல் பேச்சுவார்த்தைகள் சிறப்பாக இனியாவது முன்னெடுக்கப்பட வேண்டும்.

தகுந்த இணைப் பாட்சி முறை மலர வேண்டும். தமிழ் மக்கள் தமக்குரிய நிலங்களில் தாமே விவசாய முயற்சிகளில் ஈடுபடவும் தமது பகுதிகளில் உள்ள கடல் வளங்களை தாமே பயன்படுத்தவும் தமது தொழில்களில் தாமே தொடர்ந்து ஈடுபடவும், தமது மொழி உரிமையை உரத்துக் கூறக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவும், எமது மக்களை பற்பல நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுப்பதற்கும் நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என்றார். (2-312-315)

## மண்ணினால் அமைக்கப்பட்டதை அகற்றி புதிய பேருந்து தரிப்பிட நிழற்குடையை அமையுங்கள்

(மல்லாவி)

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பிரதான வீதியில் உள்ள பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் முழங்காவில் பகுதியில் உள்ள கிளி/ முழங்காவில் மத்திய கல்லூரி மற்றும் முழங்காவில் பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இடையே அமைந்துள்ள மண்ணினால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிட நிழல் குடை உடைந்து விழும் அபாயகரமான நிலையில் இருப்பதால் பயணிகள் அச்சத்துடனேயே நிழல் குடையை பயன்படுத்தி வரும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனை அகற்றி விட்டு புதிய பேருந்து நிழல் குடையை அமைத்து தர வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கையை மேற் கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நோயாளர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:



இந்தப் பேருந்து தரிப்பிட நிழல் குடையை கடந்த 2010 ஆம் ஆண்டு அப்பகுதியில் முகாம் அமைத்து தங்கி இருந்த இராணுவத்தினரால் மண்ணினால் சுவர் பகுதி அமைக்கப்பட்டும் ஒரு பகுதி கூரைக்கு ஓடும் மற்றைய பகுதிக்கு உடைந்த சீற் துண்டுகளையும் பொருத்தி தற்காலிக பேருந்து தரிப்பிட நிழல் குடை ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்த பேருந்து நிழல் குடையை முழங்காவில் இரணை மாதா நகர் மக்கள் குடியிருப்புக்கும் செல்லும் பேருந்து பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பிரதேச வைத்தியசாலைக்கு வருகை தரும் பயணிகளும் வீதியால் செல்லும் வழிப் போக்கர்கள் இளைப்பாறவும் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது நிழல் குடை உடைந்து விழும் அபாயகரமான நிலையில் காணப்படுவதால் பேருந்து பயணிகள் அச்சத்துடனேயே பயன்படுத்தி வரும் அவலநிலை காணப்படுகிறது.

எனவே வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் ஊடாக வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சினால் தற்போது வடக்கு மாகாண சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் பேருந்து தரிப்பிட நிழல் குடையைப் போன்று முழங்காவில் பகுதியில் புதிய பேருந்து நிழல் குடையை அமைத்து தர வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பயணிகளும் மற்றும் பொதுமக்களும் தமது கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். (2-15)

### வவுனியா—யாழ். வீதியில்

## தவறான முறையில் வெட்டப்பட்ட கிடங்கினால் அனர்த்தம் நிகழ வாய்ப்பு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

தவறான முறையில் வெட்டப்பட்ட பாரிய கிடங்கு இன்று வரை மூடப்படாமல் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இருப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வவுனியா யாழ். வீதியில் வடிகால் கட்டுமானத்திற்காக வெட்டப்பட்ட பாரிய கிடங்கு தவறான முறையில் வெட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து அதனை செப்பனிடாமல் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக காணப்பட்டு வருவதாகவும் இக் கிடங்கு பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக் கிடங்கு நீர் தேங்கிநிற்கக்கூடிய வகையில் காணப்படுவதனால் நுளம்பு பெருக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் இக் கிடங்கு காணப்படும் இடத்திற்கு அண்மையாகவே சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உள்ளமையையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் யாழ். வீதியில் விவசாய பண்ணையோரமாக வெட்டப்பட்ட வடிகான்களினூடாக நீர் வழிந்தோட முடியாதுள்ளமையினால் நீர் தேங்கி நின்று நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





எனவே இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு மக்களுக்கு ஏற்படவுள்ள நோய்த் தாக்கம் உட்பட அனர்த்தங்களை தடுக்கவழிவகை செய்ய வேண்டும் என கோருகின்றனர். (2-250)

# திறந்து வைக்கப்பட்ட இரு சந்தைகளை இயங்க வைப்பதில் நெருக்கடி நிலை

## மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

மக்கள் தொகை குறைவாக உள்ளதனாலும் விவசாயக்கிராமங்கள் என்பதனாலும் சந்தைகளை இயக்குவதில் நெருக்கடி நிலை காணப்படுவதாக முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபை செயலாளர் பி.சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ஆம்ஆண்டு மீள்குடியமர்வைத்தொடர்ந்து மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பொன்னகர் பகுதியில் பல இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளைக் கொண்ட சந்தைக்கட்டடத் தொகுதியும் பாண்டியன் குளம் பொதுச்சந்தை பல மில்லியன் ரூபா செலவிலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட இரு சந்தைகளும் இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக, பாண்டியன் குளம் சந்தை முழுமையாக மூடப்பட்ட நிலையிலும் பொன்னகர் சந்தையின் கடைத்தொகுதியில் ஒரு கடையைத் தவிர ஏனைய கடைகளும் சந்தையும் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை குறித்த பொன்னகர் சந்தையின் மாதாந்த வரியினை பிரதேசசபைக்குச் சென்றே குறித்த வர்த்தகர்கள் செலுத்தி வருவதாகவும் சந்தையின் துப்பரவுப்பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லையென்றும் பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

இதேவேளை இரண்டு சந்தைகளுக்கும் ஒரு கிலோமீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்வதற்கு பொது இடங்களில் மீன், இறைச்சி போன்ற விற்பனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அத்துடன் பாண்டியன் குளம் பொதுச்சந்தை மூடப்பட்டிருப்பதால் நீண்டகாலமாக சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்த வியாபாரி எஸ்.ஆர்.சந்திப்பகுதியில் தனியார் வர்த்தக நிலையக் கட்டடம் ஒன்றில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்வாறு இரண்டு சந்தைகளையும் இயங்க வைப்பதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மாந்தைகிழக்குப்பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது, பாண்டியன்குளம் பொதுச்சந்தை, பொன்னகர் பொதுச்சந்தை ஆகியன மீள்குடியேற்றத்தின் போது நீண்டகால நோக்கோடு அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சந்தைகளாகும்.

பிரதேச சபையினால் சந்தைகள் மூடப்படவில்லை. பொன்னகர் பொதுச் சந்தையில் கடைகள் கேள்வி கோரல் மூலம் வழங்கப்பட்டன.

சந்தைக் கட்டடத்தொகுதியும் கேள்வி கோரல்கள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எவரும் எடுக்கவில்லை.

இதேபோல பாண்டியன் குளம் பொதுச்சந்தை கேள்வி கோரல் விடப்பட்டிருக்கின்றது எனத்தெரிவித்த அவர், இங்கு மக்கள் தொகை குறைவாக இருப்பதனாலும் விவசாயக் கிராமம் என்பதனாலும் சந்தைகளை இயக்குவதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# இராணுவத்தினர் சேகரித்து வைத்திருந்த வாகனங்கள் இரவு வேளையில் திருட்டு

## உரியவர்களிடம் ஒப்படைக்க ஆவன செய்யுங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முகமாலைப் பகுதியில் இறுதி யுத்த காலத்தில் பொது மக்களினால் கைவிடப்பட்ட வாகனங்களில் சிலவற்றை முகமாலை கிளாலி வீதிச் சந்திப் பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் சேகரித்து வைத்திருந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக குறித்த இராணுவ முகாமை மூடிவிட்டு இராணுவத்தினர் வெளியேறிய நிலையில் அவர்களால் சேகரித்து வைத்திருந்த வாகனங்களைக் கைவிட்டு சென்றிருந்தனர்.

இந் நிலையில், அண்மை நாட்களாக இனம் தெரியாத நபர்கள் இரவு நேரங்களில் அவை திருடப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்தி அவற்றின் உரிமையாளர்களை இனம் கண்டு கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு முகமாலைப் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது பல வாகனங்கள் அங்கும் இங்கும் சேதமடைந்த நிலையில் மற்றும் பகுதியளவில் சேதமடைந்த நிலையிலும் சிதறிக் கிடந்தன.

முகமாலையில் கிளாலி வீதிச் சந்திக்கு அண்மையாக முகாமிட்டிருந்த இராணுவத்தினரால் பல உழவு இயந்திரப் பெட்டிகள் உட்பட சிதைவடைந்த வாகனங்களின் இயந்திரங்கள் என்பன முகாமுக்கு அருகே சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

தற்போது மக்களின் மீள் குடியமர்வுக்காக தங்கள் வசம் இருந்த படை முகாம் பகுதியை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளனர்.

இதன்போது , இராணுவத்தினர் தாங்கள் சேகரித்து வைத்திருந்த 12, உழவு இயந்திரங்களின் பெட்டிகள் மற்றும் நல்ல நிலையிலும், சேதமடைந்த நிலையிலும் காணப்பட்ட 2,லான்மாஸ்ரர் பெட்டிகள் உட்பட 2 வாகன இயந்திரங்கள் என்பனவற்றை கைவிட்டு சென்றிருந்தனர்.

இதனையே தற்போது இனம் தெரியாத நபர்கள் இரவு நேரங்களில் வந்து களவாடிச் செல்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் சொத்தை பாதுகாத்து உரியவர்களிடம் கையளிக்க ஆவன செய்ய வேண்டும் அல்லது அதனை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து அதில் வரும் பணத்தை யுத்த சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்ட முகமாலைப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம முன்னேற்றச் சங்கங்களின் பொது நலன் சார்ந்த வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வழங்க வேண்டும் என கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (2-15)




# ஆன்மீகச் சுற்றுலா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் முதியோர் உள சமூக மேம்பாடு கருதி ஆன்மீகச் சுற்றுலா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த புதுமுறிப்பு, இரத்தினபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முதியோர்கள் 40 பேர் திருகோணமலை மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

அங்கு கன்னியா வெந்நீரூற்று, திருக்கோணேச்சரம், ஆத்திமோட்டையில் உள்ள லக்சுமி நாராயணன் கோவில், நகரத்திலுள்ள சிறிபத்திரகாளி அம்பாள் கோயில் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள ஆன்மீகச் சுற்றுலாவில் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சமூக சேவைகள் அலுவலர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ள உள்ளனர். (2)



இலங்கைக்கு ஆன்மீக யாத்திரையாக வருகை தந்திருந்த அமெரிக்க ஹவாய் ஆதீன குருமகா சந்நிதானம் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளுக்கும் அவருடன் கூட வருகை தந்த ஏனைய யாத்திரிகர்களுக்கும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலில் வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்ட போது...

# இறால் தொழிலாளர்களின் வலைகள் முதலைகளால் சேதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி, ஊரியான், தட்டுவன்கொட்டி சிறுகடல் பகுதிகளில் இறால் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் வலைகளை முதலைகள் சேதமாக்கி வருவதாகவும் இதனால் தொழில் செய்யமுடியாத நிலை காணப்படுவதாக இச்சிறுகடல் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி சுண்டிக்குளம், புளியம்பொக்கணை, தட்டுவன்கொட்டி, ஊரியான் ஆகிய பகுதிகளில் தற்போது இறால் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிறுகடல் தொழிலை மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள் ஊரியான்,தட்டுவன்கொட்டி ஆகிய தொழிலாளர்களின் வலைகளையே தற்போது முதலைகள் சேதமாக்கி வருகின்றன.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் இவ்வாறான முதலையின் தாக்கம் இல்லாதிருந்ததாகவும் இவ்வருடம் என்றுமில்லாதவாறு முதலைகள் வலைகளைச் சேதமாக்கி வருகின்றன எனவும் பாதிக்கப்பட்டவர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பதினைந்து நாட்களுக்குள் தட்டுவன்கொட்டி ஊரியான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறுகடல் தொழிலாளர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் தொழில் நடவடிக்கைகள்முற்றாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இப்பகுதி கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-312)

# நெல் உலரவிடும் தளத்தை விரைவாக அமைக்க கோரிக்கை



(கண்டாவளை)


முல்லைத்தீவு மாவட்டத்தின் புத்துவெட்டுவான் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற நெல் உலரவிடும் தளத்தை உரிய முறையில் விரைவாக அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புத்துவெட்டுவான் மணல்குளம், மருதன் குளம், வெளிவயல்குளம் ஆகியவற்றின் கீழ் விவசாயத்தை மேற்கொள்கின்ற விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை உலர வைப்பதற்கான உரிய தளங்கள் இன்மையால் மருதன் குளம் வான்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்ற பாலத்தில் நெல்லை உலரவிடுகின்றனர்.

தற்போது இந்தப்பகுதியின் தேவை கருதி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட நெல் உலரவிடும் தளம் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக கட்டுமானப்பணிகள் மந்தகதியில் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ள விவசாயிகள் இதனை உரிய முறையில் விரைவாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கை! அமைச்சரவை மாற்றம் குறித்து நாமல்


Namal Rajapaksa
@RajapaksaNamal
New reshuffle is a complete farce. Sad attempt at fooling the people & appeasing few ministers. Last election ignored & the people's voice with it. Reshuffling cabinet does not change anything. The people expected better than swapping portfolios. #SriLanka #cabinetreshuffle
3:22 PM - Feb 25, 2018 · London, England
50 · 20 people are talking about this

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றமானது மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“அமைச்சரவை மாற்றம் என்பது ஒரு முழுமையான கேலிக்கூத்தான விடயமாகும். இது மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கை. அத்துடன் சில அமைச்சர்களை திருப்திப்படுத்தும் முயற்சியாகும்.

இந்நிலையில், அமைச்சரவையை மாற்றுவதன் மூலம் எதனையும் மாற்ற முடியாது என அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அனைத்துலக சித்தமருத்துவ மாநாட்டில் அலைமோதும் பார்வையாளர் கூட்டம்



யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினரால் நடத்தப்பட்டுவரும் முதலாவது அனைத்துலக சித்த மருத்துவ மாநாடு மற்றும் கண்காட்சியைக் கண்டுகளிப்பதற்காக பார்வையாளர்கள் மிக அதிகளவில் கலந்து கொள்வதால் கண்காட்சி கூடங்களில் மிகவும் சன நெருக்கடியாகக் காணப்படுகிறது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வளவாளர்கள் வருகை தந்துள்ளதுடன் வர்ம சிகிச்சை, எலும்பு முறிவு,யோகா முதலியவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களால் சித்த வைத்தியர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் நடத்தப்பட்டு வருகின்றது. அந் நிபுணர்களிடம் ஆலோசனை பெறுவதற்காகவும் பல நோயாளிகள் அழைத்து வரப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது.

மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் இன்று திங்கட்கிழமையும் அகத்தியர், யோகர், திருமூலர், தேரையர் ஆகிய சித்தர்கள் பெயர்களால் அமைந்த அரங்கங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கண்காட்சிப் பிரிவுகளில் மூலிகை மருந்துகளையும் மூலிகைத் தயாரிப்புகளையும் பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்குவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (க).

# ‘ஜெ’ உருவச் சிலை மறுசீரமைக்கப்படும்

## அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



(சென்னை)

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 70 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அ.தி.மு.க தலைமைக் காரியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் உருவச் சிலை மறுசீரமைக்கப்படும் என, மீன்பிடித் துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.


தமிழகத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் நேற்று முன்தினம் மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இதன்போது, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரால் அ.தி.மு.க தலைமைக் காரியால்யத்தில் ஜெயலலிதாவின் வெண்கல உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த வெண்கலச்சிலை ஜெயலலிதாவை போன்று இல்லையென சமூக வலைத்தளங்களில் பலரால் விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையிலேயே அமைச்சர் ஜெயக்குமார் நேற்று சென்னையில் வைத்து ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

# விமானப் பணியாளர்களுடன் செல்பி எடுத்த பிரிகேடியர்



(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பாதுகாப்பு ஆலோசகரான பிரிகேடியர் பிரியந்த பெர்னாண்டோ கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இவர் இலங்கை வரும் போது ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் பணியாளர்களுடன் செல்பி எடுத்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் முன்பாக புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களை எச்சரிக்கும் வகையில் செயற்பட்டிருந்தார் என பிரியங்க பெர்னாண்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவர் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டதுடன், ஜனாதிபதியின் உத்தரவில் அவர் மீண்டும் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் பிரியங்கர பெர்னாண்டோவின் பாதுகாப்பு மற்றும் தூதரகத்தின் நற்பெயரை கருத்தில் கொண்டு அவர் மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-10)

# வீடொன்றின் மதிலில் மோதி பாடசாலை மாணவன் பலி

(கொழும்பு)

நேற்று முன்தினம் இரவு கலேவல, கெப்பிட்டிய, ரன்வெட்டியாவ பகுதியில் பாடசாலை மாணவர் ஒருவன் வீடொன்றின் மதிலில் மோதி உயிரிழந்துள்ளதாக கலேவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலேவல, ரன்வெட்டியாவ பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மொஹமட் இப்ஷான் எனும் பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் தனது சக நண்பர்களுடன் நேற்றுமுன்தினம் இரவு வழிபாடுகளுக்காக பள்ளிவாசலுக்கு சென்று பின்னர் நண்பர்கள் மூவருடன் கெப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலத்தின் பின் பகுதியில் அரட்டை அடித்துக் கொண்டிருந்ததாகவும் இதன் போது அவர்களை யாரோ பயமுறுத்தியதை தொடர்ந்து அவர்கள் தல்லைதெறிக்க ஓடியுள்ளதாகவும் உயிரிழந்த மாணவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

இந்த மாணவன் அந்த இடத்தில் இருந்து 300 மீற்றர்வரை ஓடிச் சென்று கொண்டிருந்த போது அப்பகுதியில் இருந்த வீடொன்றின் நுழைவாயிலில் இரவு 7.30 மணியளவில் மோதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 8.30 மணியளவில் மாணவனைத் தேடிச் சென்ற போது குறித்த வீட்டின் நுழைவாயிலுக்கு அருகில் விழுந்திருந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கலேவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனை நடத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரவெட்டி பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

துப்பாக்கி சூட்டு காயங்களுடன் நேற்று அதிகாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை வீட்டில் இருந்து சென்றவரே உயிரிழந்துள்ளதாகவும், சடலத்திற்கு அருகில் கட்டுத்துவக்கு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கரவெட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய மன்மதன் அருள்ராஜ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-10)



அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகத்துக்கான சீருடைகளை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைத்தார். கோப்பாய்த் தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பகீரதனின் வேண்டுகோளுக்கு அமைவாக தனது 2017ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து மேற்படி சீருடைகளை விளையாட்டுக்கழக தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் வழங்கி வைத்தார். அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், கோப்பாய்த் தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பகீரதன் மற்றும் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருக்க முடியாது

# பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ விடாப்பிடி



(கொழும்பு)

அரசாங்கத்தின் பங்காளியாக இருந்து கொண்டு இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பதவியில் ஒருபொழுதும் இருக்க முடியாது. எனவே அவரை உடனடியாக பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்திரமற்ற அரசாங்கத்தினால் நாட்டுக்கு எவ்வித பயனும் இல்லை. ஆகவே நாட்டின் நலன் கருதி காலதாமதமின்றி பாராளுமன்றத்தை கலைத்து புதிய ஆட்சி அதிகாரத்தை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது எதிர்க்கட்சிப் பதவி தொடர்பில் பாரிய கருத்து வேறுபாடுகள் காணப் படுகின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பதவியை கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங் குவது பாராளுமன்ற சம்பிர தாயங்களுக்கு முரணானது என்று குறிப்பிடுவது வேடிக் கையாகவே காணப்படுகின் றது. தேசிய அரசாங்கத்தின் பங்காளியாக மாத்திரம் செயற் படும் எதிர்க்கட்சி தலைவர் தனது பதவியின் கடமை களை கடந்த மூன்று வருட காலமாக மேற்கொள்ளாமல் ஒருதலைப்பட்சமாகவே செயற் படுகின்றார்.

கடந்த அமைச்சரவை கூட்டத்தில் கூட்டு எதிர்க்கட் சியை 50 வீதமான மக்கள் கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலில் நிராகரித்துள்ளனர் என ரணில் குறிப்பிட்டுள்ளார். நாட்டு மக்களில் 93 வீதமானோர் தமிழ்த் தேசிய கூட்டமைப் பினை நிராகரித்ததை அவர் மறந்து விட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் என்ற பதவியானது அரசாங் கத்திற்கு எதிராகவே செயற் படவேண்டும். அப்போது தான் ஆளும் அரசாங்கம் நிர்வாக த்தினை முறையாக கொண்டு செல்ல முற்படும். ஆனால் இலங்கையில் அவை சாத் தியமற்றதாகவே காணப்படு கின்றது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பதவி ஒன்று உள்ளதா என்பது மக்கள் மத்தியில் பாரிய சந்தேக மாகவே காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

கண்டி தலதா மாளிகை யில் நேற்றுக் காலை வழிபா டுகளை மேற்கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்க ளுக்கு கருத்து தெரிவிக்கை யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## விவசாய சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்
## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களை விவ சாய செய்கையில் ஊக்குவிப் பதன் மூலம் நல்லதொரு விவசாய சமூகத்தை கட்டி யெழுப்ப வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனை யாளர் கூட்டுறவுச் சமாசத் தின் ஏற்பாட்டில் உருளைக் கிழங்கு அறுவடை விழா நேற்று குப்பிளான் விவசா யிகள் விளைநிலத்தில் இடம் பெற்றது. அந்த நிகழ்வில் தவிர்க்கமுடியாத காரணத்தி னால் கலந்துகொள்ளாதபோதும் விவசாயிகளுக்கு வழங்கியி ருந்த செய்திக்குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

மேலும் அந்த செய்திக் குறிப்பில் விவசாயிகள் நன்மை கருதி ஜனாதிபதியிடம் விடுக் கப்பட்ட கோரிக்கை நிறை வேற்றப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுகி ன்ற விவசாயிகளுக்கு கடந்த வருட காலபோகத்தில் 50 வீத மானிய அடிப்படையில் 267 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு திருநெல் (வேலி விவசாய திணைக்கள த்தில் வழங்கி வைக்கப் பட்டிருந்தது.

இந்த வகையில் நல்ல விளைச்சலை விவசாயிகள் பெற்றுள்ளனர். நன்மை களை விதைத்தால் உண்மை யான அறுவடைகளைப் பெற லாம்.

மேலும் உள்நாட்டு விவ சாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான வரியை அரசு முப்பது ரூபா வால் அதிகரித்துள்ளது. மார்ச் மாதம் முதல் இந்த நடை முறை அமுல்படுத்தப்படவு ள்ளது.

அதேபோன்று பொதுமக்க ளின் தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகி றது. அதே போன்று, மக்க ளின் சகல யதார்த்தமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றி தரப்படும்.

எதிர்வரும் காலத்தில் யாழ். மாவட்ட விவசாயத் துறையை மேம்படுத்தும் முக மாக இளைஞர்களை விவ சாய செய்கையில் ஊக்குவி த்து அதனூடாக நல்லதொரு விவசாய சமூகத்தை கட்டி யெழுப்ப முன்வர வேண்டு மென அவர் மேலும் தெரி வித்தார். (இ-9)

## ஊருக்குள் நுழைந்த யானைகளால் சேதம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வாகரை பிரதேசத்தில் பிரதான வீதியை அண்டியுள்ள கிராமங்களுக் குள் நேற்று ஞாயிற்றுக்கி ழமை அதிகாலை பிரவேசி த்த காட்டு யானைகளால் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டுள் ளதாக கிராம மக்கள் தெரி வித்தனர்.

ஆழமான கடல் முகத்து வாரத்தை நீந்திக் கடந்து வந்து இந்த யானைகள், ஊருக்குள் புகுந்ததாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மக் கள் வாகரை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய் துள்ளனர்.

வாகரையின் ஒதுக்குப்புற காட்டுப் பிரதேசங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அவ்வப்போது இருந்து வந் துள்ளது. காட்டு யானைகள் ஆழமான வாவியை நீந்திக் கடந்து பிரதான வீதியோடு அண்டியுள்ள ஊர்ப் பகுதிக் குள் பிரவேசித்தது கடந்த 50 வருட காலத்தில் இதுவே முதல் தடவை என விவசாய அமைப்பின் செயலாளர் ரீஜீ குரு குலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் யாங்கேணி கிரா மத்திற்குள் ஊடுருவிய காட்டு யானைகளை அங்குள்ள கிராமத்தவர்கள் ஒன்று சேர் ந்து விரட்டியுள்ளனர். அவ் விதம் விரட்டப்பட்ட யானை கள் கடற்கரையோர காடுகளுக் கூடாக வாகரை பிரதேசத்தில் புகுந்து அங்கிருந்த தென்னை மரங்களை அழித்துள்ளன.

கிராம மக்களை பாதுகாப் பதற்கும் யானைகளை விரட்டு வதற்கும் வனவிலங்கு திணை க்கள அதிகாரிகளின் உதவி நாடப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (இ-7)

## கடலில் மூழ்கி இளைஞன் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை துறை முகப்பொலிஸ் பிரிவிற்குட் பட்ட மனையாவெளி கடல் பகுதியில் நேற்று முன் தினம் மாலை நீராடச் சென்றவர் களில் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது டன், மற்றொருவரை இது வரை காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை எட்டு இளைஞர்கள் கடலில் குளிக்கச் சென்றுள்ளதுடன், அதில் இருவர் கடல் அலை யில் அடித்துச் செல்லப்பட்டி ருந்தனர். பின்னர் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப் பட்ட துடன், மற்றொரு இளை ஞரை தேடும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

16 வயதுடைய சு. சிந்து ஜன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (இ-7)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிகரெட்டுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட் தொகை யுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை டுபாயில் இருந்து இந் நாட்டுக்கு வந்த குறித்த நபரின் பயணப்பை யில் இருந்து சுமார் 20 ஆயி ரம் சிகரட்டுகள் கைப்பற்றப் பட்டுள்ள நிலையில், அவற் றின் பெறுமதி ரூபாய் 10 இலட்சம் என தெரிவிக்கப்பட் டுள்ளது. சந்தேக நபர், நீர் கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த 26 வயதான நபர் என தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கைப்பற்றப் பட்ட சிகரட் தொகை அரசு டைமையாக்கப்பட்டுள்ளது டன் சுங்க பிரிவால் ரூபாய் 25 ஆயிரம் தண்டப் பணம் விதித்து குறித்த நபர் விடு விக்கப்பட்டுள்ளார். (இ-7)

## சு.க.வின் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு அதே இடம்

(ஏறாவூர்)

புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமை ச்சு தொடர்ந்தும் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். 'ஹிஸ்புல்லாஹ்' வசமே ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அமைச்சு, பிரதி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச் சுப் பதவிகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டன.

இருப்பினும் ஹிஸ்புல்லாஹ் இதுவரை காலமும் வகித்து வந்த இராஜாங்க அமைச்சுப் பதவி எவ்வித மாற்றங்க ளுமின்றி தொடர்ந்தும் அவர் வசமே உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஹிஸ் புல்லாஹ்,

அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்ட போதிலும் அது ஐக்கிய தேசிய கட்சி சார்ந்த உறுப்பினர் களது அமைச்சுக்களிலேயே மாற்றங்கள் செய்யப்பட்டிரு ந்தன.

விரைவில் ஸ்ரீலங்கா சுத ந்திரக் கட்சி உறுப்பினர்களது அமைச்சுக்களிலும் மாற்றங் கள் செய்யப்படவுள்ளதாக கட்சித் தலைவரும் ஜனாதிப தியுமான மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

எனக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டதாக உத்தியோக பூர்வமாக எதுவும் கூறப்பட வில்லை. நாட்டில் ஏற்பட்டு ள்ள அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அவ்வாறு வழ ங்குவதற்கான வாய்ப்புக்க ளும் மிகவும் குறைவாகவே உள்ளன. எனவே, தொடர்ந் தும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சராக நான் செயலா ற்றுவேன் என்றார். (இ-7)

# பாரதம்

# புகழ் பூத்த நடிகை ஸ்ரீதேவி மாரடைப்பால் திடீர் மரணம்



(மும்பை)
தமிழ், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழி திரைப்படங்களில் நடித்த பிரபல நடிகை ஸ்ரீதேவி முபாயில் மாரடைப்பால் மரணம் அடைந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசியை சொந்த ஊராக கொண்டவர் ஸ்ரீதேவி (54). இவர் 4 வயதிலேயே திரைப்படத் துறையில் நுழைந்தவர்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம், உள்ளிட்ட பல்வேறு மொழி திரைப்படங்களில் நடித்தவர்.

தமிழில் 16 வயதினிலே, மூன்றாம் பிறை, மீண்டும் கோகிலா, பிரியா, சிவப்பு ரோஜாக்கள், வறுமையின் நிறம் சிவப்பு உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

மேலும், தமிழ் திரைப்பட உலகில் கமல், ரஜினி உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் நடித்து புகழ் பெற்றவர். இவர் 2013-ம் ஆண்டில் மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது, பிலிம்பேர் விருதுகள், மூன்றாம் பிறை படத்துக்கான தமிழக அரசின் விருது என பல்வேறு விருதுகளை பெற்றார்.

இந்திய திரைப்பட தயாரிப்பாளர் போனி கபூரை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு இரண்டு மகள் உள்ளார்கள். சமீபத்தில் அவர் நடித்த மாம் திரைப்படம் வெளியானது.

இந்நிலையில், நடிகை ஸ்ரீதேவி திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் இரவு டுபாய் சென்றார். இரவு 11 மணியளவில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவரது உயிர் பிரிந்தது என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (10)

# திரையுலகில் பன்முகத்திறமையை வெளிக்காட்டிய ஸ்ரீதேவி

## பிரதமர் மோடி இரங்கல்

(டில்லி)
நடிகை ஸ்ரீதேவி மறக்க முடியாத நடிப்பை திரைப்படங்களில் வழங்கியுள்ளதாக பிரதமர் மோடி தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், ஹிந்தி திரைப்படங்களில் நடித்து ரசிகர்களின் மனதை கவர்ந்த நடிகை ஸ்ரீதேவி நேற்று முன்தினம் திடீரென மாரடைப்பால் காலமானார். அவரது மறைவு திரையுலகினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

ஸ்ரீதேவியின் திடீர் மறைவு அதிர்ச்சியளிக்கிறது. திரையுலகில் பன்முக திறமையை வெளிக் காட்டியவர். பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து மறக்க முடியாத நினைவலைகளை பதிவு செய்தவர்.

அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆத்மா அமைதியடையட்டும் என பிரதமர் மோடி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது, ஸ்ரீதேவி மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

இது அவரது இலட்சக் கணக்கான ரசிகர்களுக்கு பேரிழப்பாகும் மூன்றாம்பிறை, லம்ஹே, இங்கிலிஸ்விங்லீஸ் ஆகிய படங்களில் அவர் நடித்தது மற்ற நடிகர்களுக்கான முன்னுதாரணமாக இருக்கும்.

அவரது குடும்பத் தினருக்கும், சார்ந்தோருக்கும் எனது இரங்கலை தெரி வித்துக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# தமிழ் பாரம்பரியத்திற்கு தலை வணங்குகிறேன்

## பிரதமர் மோடி பெருமிதம்

(சென்னை)
அம்மா ஸ்கூட்டர் திட்டம் அறிமுக விழாவில் கலந்து கொண்ட பிரதமர் மோடி தமிழுக்கும், தமிழ் பாரம்பரியத்திற்கும் நான் தலைவணங்குகிறேன் எனத் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 70ஆவது பிறந்த நாளான நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் வேலைக்கு செல்லும் பெண்கள் மோட்டார் சைக்கிள் மானியம் வழங்கும் 'அம்மா ஸ்கூட்டர் திட்டம்' அறிமுக விழாவில் பிரதமர் மோடி பயனாளிகளுக்கு ஸ்கூட்டர்களை வழங்கினார்.

அப்போது பிரதமர் மோடி கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழுக்கும், தமிழ் பாரம்பரியத்திற்கும் நான் தலை வணங்குகிறேன். அன்புமிக்க சகோதர, சகோதரி களே வணக்கம். மகாகவி. பாரதியாரின் மண்ணில் நிற்பதற்கு பெருமைப்படுகிறேன். ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஜெயலலிதாவின் கனவு திட்டமான மானியப் ஸ்கூட்டர் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்துக்கு காங்கிரஸ் ஆட்சியில் வழங்கப்பட்டதை விட இப்போது கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஏராளமான நிதி வழங்கப்பட்டுள்ளது. மகளிருக்கான பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயற்படுத்தி வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் பெண்கள் பயன் பெறுகின்றனர்.

பெண்களின் கல்விக்கு உதவும்போது அவர்களில் மொத்த குடும்பமும் பயன் பெறுகிறது.

சாமானியர்களுக்கு அதிகாரமளித்தலை முதன்மை நோக்கமாக கொண்டு மத்திய, மாநில அரசுகள் செயற்படுகின்றன. சுகாதாரம், விவசாயிகள் நலன் ஆகியவற்றை இலக்காக வைத்து மத்திய அரசு செயற்படுகிறது.

மகளிருக்கான வாகனம் ஒட்டுமொத்த குடும்பத்துக்கும் பயன்தரும். சூரிய மின் சக்தி, தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட திட்டங்களுக்கு தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டங்கள் மூலம் தமிழக விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாநில அரசுடன் இணைந்து உயர்த்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)



# கொலை...

# போர் நி...



(நியூயோர்க்)
சிரியா கிழக்கு கூட்டா நகரில் கடந்த ஒரு வாரகாலமாக அரசு ஆதரவு படையினரின் கொடூரத் தாக்குதலில் 500 பொது மக்கள் பலியான நிலையில் ஐ.நா.பாதுகாப்பு சபை 30 நாள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசு ஆதரவுப்படையினர் ஆவேச தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க உளவு அமைப்பு ஆயுத உதவிகளை நிறுத்தியதால் கிளர்ச்சியாளர்கள் பல இடங்களில் வீழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரமாக ஓயாது வான் தாக்குதல்களில் 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக போர் மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

பலியானவர்களில் அநேகமானோர் 15 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மருத்துவம் மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள போர் நிறுத்தம் செய்ய

# அணு ஆயுத சோதனையி... கப்பல் நிறுவனங்கள் மீது...

(வோஷிங்டன்)
வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்கும், வர்த்தகத்துக்கும் உடந்தையாக உள்ள வெளிநாட்டு கப்பல் நிறுவனங்கள் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள், ஐ.நாவின் கடும் எச்சரிக்கைகளையும் மீறி, வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது. இதனால், அந்த நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதையும்மீறி அணு ஆயுத சோதனைகளை வடகொரியா நடத்தி வருகிறது. இதனால், வருமானத்துக்கான எல்லா வழிகளையும் அடைத்த பிறகும் அந்நாட்டுக்கு எங்கிருந்து நிதி ஆதாரம் கிடைக்கிறது என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குழப்பம் அடைந்துள்ளன.

வடகொரியாவின் முக்கிய உற்பத்தி பொருட்கள் கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டு, சர்வதேச கடல் பகுதியில் அவை வேறு கப்பல்களுக்கு மாற்றப்பட்டு பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சப்ளை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல், வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்கு தேவையான மூலப்பொருட்கள், எரிபொருட்களும்

# காவிரி மேலாண்மை வா... நரேந்திர மோடிக்கு இ...

(சென்னை)
ஜெயலலிதா பிறந்தநாள் விழாவின்போது, காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 70 ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் உழைக்கும் பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டர் வழங்கும் விழா மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

கடந்த 16 ஆம் திகதி டில்லியில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பாடசாலை மாணவ-மாணவிகளின் தேர்வுகள் தொடர்பான விவாதத்தின் போது, தமிழ்மொழி சமஸ்கிருதத்தை விட பழைமையானது, அதனை நான் கற்றுக்கொள்ளாதது எனக்கு

# வெளிநாடு



# ...லக்களத்தில் ...நிறுத்தம்

வேண்டும் என கோரிக்கை எழுந்தது. ஆனாலும், போர் நிறுத்தம் செய்வதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், 30 நாள் போர் நிறுத்தத்திற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் ஒருமனதாக ஆதரவு அளித்துள்ளது. இதனையடுத்து போர் நிறுத்தம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. காயமடைந்த வர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பது, தற்காலிக முகாம்கள் அமைப்பது போன்ற பணிகள் 30 நாட்களில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த போர் நிறுத்தம் ஐ.எஸ். தீவிரவாதிகளுடனான சண்டைக்கு பொருந்தாது என குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் மீதான விவாதத்தில், அரசு ஆதரவு படையில்உள்ள ரஷ்யா தனது பார்வையை



மாற்றிக்கொள்ள வேண்டும் என ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க இந்த 30 நாட்கள் போர் நிறுத்தத்தை தீவிரவாத இயக்கங்கள் மற்றும் கிளர்ச்சிக்குழுக்கள் வரவேற்றுள்ளன.



கடந்த 2013ஆம் ஆண்டு சிரியாவில் இரசாயன தாக்குதல் நடத்தப்பட்டதில் 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர்.

இந்த ரசாயன தாக்குதலை நடத்தியது கிளர்ச்சியாளர்கள் என்றும் அரசுப்படைகள் என்றும் மாறி மாறி குற்றம் சாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (10)

# ...யில் வடகொரியாவுக்கு உடந்தை ...மீது தடை- அமெ.மீண்டும் அதிரடி

வேறு நாட்டு கப்பல்களில் கொண்டு வரப்பட்டு சர்வதேச கடல்பகுதிகளில் அவை வடகொரிய கப்பல்களுக்கு மாற்றி எடுத்துச் செல்லப்பட்டதும் தெரிய வந்தது.

சர்வதேச கடல் பகுதிகளில் 56க்கும் மேற்பட்ட இடங்களில் இந்த சட்டவிரோத பொருள் பரிமாற்றம் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, வடகொரியாவுக்கு உடந்தையாக இருந்த 27 வெளிநாட்டு கப்பல் நிறுவனங்கள், 28 கப்பல்கள் மற்றும் ஒரு தனிநபர் மீது அமெரிக்கா நேற்று தடை விதித்தது. இந்த கப்பல் நிறுவனங்கள் சீனா, சிங்கப்பூர், தாய்வான், மார்ஷல் தீவுகள், தான்சானியா, பனாமா மற்றும் காமரோஸ் உள்ளிட்ட நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால், வடகொரியாவுக்கு வருமானம் கிடைக்கும் வழிகள் அடைக்கப்பட்டுள்ளன.

இது பற்றி ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் அளித்த பதிலில், "வடகொரியா மீது விதிக்கப்பட்ட முதல்கட்ட பொருளாதார தடைகளால் பயன் ஏற்படவில்லை என்றால், 2ம் கட்ட தடைகள் விதிக்கப்படும். அது, உலகளவில் இதுவரை விதிக்கப்படாத கடுமையான தடையாகவும், மிகவும் கரடுமுரடான ஒன்றாகவும் இருக்கும். உலகத்துக்கு அது மிகமிக துரதிர்ஷ்டவசமானதாகவும், கவலைதரக்கூடியதாகவும் அமையும். இருப்பினும், முதலில் விதிக்கப்பட்ட தடையால் நல்ல பலன் ஏற்படும் என்று நம்புகிறேன். வடகொரியா ஒரு போக்கிரி நாடு. அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உலகளவில் எங்களுக்கு மிகப்பெரிய ஆதரவு இருக்கிறது. எனவே, பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒப்பந்தம் ஏதாவது ஏற்பட்டால் மிகவும் நல்லது என அதிரடி கருத்து வெளியிட்டுள்ளார். (10)

# ...வாரியம் அமைக்கக்கோரி ...இ.பி.எஸ். கோரிக்கை

வருத்தமளிக்கிறது எனவும், தமிழ்மொழி பல சிறப்புகளை கொண்டது என தமிழ்மொழியை பாராட்டிப் பேசிய பிரதமருக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெயலலிதாவின் ஆசியோடும், அருளோடும் 16.02.2017 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நான் அன்றைய தினமே ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில், ஐந்து திட்டங்களுக்கான கோப்புகளில்நான் முதலில் கையெழுத்திட்டேன்.

நான் முதன்முதலில் க்கையெழுத் திட்ட அந்த ஐந்து திட்டங்களில் முதல் திட்டமான "அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்" தமிழ்நாட்டின் தலை மகளாகவும், தமிழ்த் தாயின் தவப் புதல்வி யாகவும் திகழ்ந்த ஜெய லலிதா பிறந்த இந்த நன்னாளில்பிரதமர்தனது திருக்கரங்களால் தொடங்கி வைப்பதன் மூலம், இத்திட்டத்திற்கு மேலும்பெருமைசேர்கிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படை யில் தமிழ்நாடே ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் 'காவிரி மேலாண்மை வாரியம்' மற்றும் 'காவிரி நீர் முறைப் படுத்தும் குழு' ஆகியவற்றை உடனடியாக அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் என பிரதமர் மோடியிடம் இ.பி. எஸ் கோரிக்கை விடுத்தார். (10)

# சோமாலியா இரட்டைக்கார் குண்டு வெடிப்பு பலி எண்ணிக்கை 50 ஆக அதிகரிப்பு

(டமாஸ்கஸ்)

சோமாலியா மொகாடிசு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட இரட்டை கார் வெடிகுண்டு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியா தலைநகர் மொகாடிசுவில் உள்ள அரசு அலுவலகங்களை குறிவைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு இடங்களில் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிப்பட்டிருந்த பலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்த 36 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல்களுக்கு அல் கொய்தா அமைப்புடன் தொடர்பில் இருக்கும் அல் ஷபாப் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஏற்கனவே, கடந்த ஒக்டோபர் மாதத்தில் மொகாடிசு நகரில் அல் ஷபாப் தீவிரவாதிகள் வெடிபொருள் நிரப்பிய லொறியை வெடிக்க செய்ததில் சுமார் 500-க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# பாகிஸ்தான் புனிதர்களின் பூமி பிரதமர் ஷாஹித் புகழாரம்

(இஸ்லாமாபாத்)



மேற்கத்தேய ஊடகங்கள் கூறுவதுபோல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் வாழும் நாடல்ல, எங்கள் நாடு புனிதர்களின் பூமி என பாகிஸ்தான் பிரதமர் ஷாஹித் காகான் அப்பாசி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள ஆளுநர் மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற லாகூர் இலக்கிய விழாவில் அந்நாட்டின் பிரதமர் ஷாஹித் காகான் அப்பாசி கலந்து கொண்டு உரையாற்றியபோது.

இதுபோன்ற இலக்கிய விழாக்களில் பங்கேற்க பல நாடுகளில் இருந்து இலக்கியவாதிகள் வருவதால் சமூகத்தில் சகிப்புத்தன்மை அதிகரிக்கும். இதன் மூலம் அன்பு என்னும் நற்செய்தி அவர்கள் நாட்டை சென்றடையும். பாகிஸ்தானின் முகம் மேற்கத்தேய ஊடகங்களால் தவறாக சித்திரிக்கப்படுவதுபோல் இது தீவிரவாதிகள் நிறைந்த நாடல்ல. உள்நாட்டு கலாசாரம் கலந்த பாரம்பரியமும், புனிதர்களின் போதனைகளும்எங்கள்நாட்டு உண்மை வாழ்க்கையின் நிஜ முகமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# பீஜிங் - நியூயோர்க் விரைவு விமானம் மணிக்கு 8600 கி.மீ. வேகத்தில் அசத்தல்

(பீஜிங்)

பீஜிங்கில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு மிக அதிவேகமாக பறந்து செல்லும் 'ஹைபர் சோனிக்' விமானத்தை சீனா தயாரித்துள்ளது.

இதன் மூலம் பீஜிங்கில் இருந்து நியூயோர்க்குக்கு 2 மணி நேரத்தில் பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு சேர்க்க முடியும் என இதை வடிவமைத்த சீன அறிவியல் அகடமியின் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பீஜிங்- நியூயோர்க் இடையே 13 1/2 மணி நேரம் விமான பயணம் நடைபெறுகிறது.

மிக அதிவேக மாக 'ஹைபர் சோனிக்' விமானம் மணிக்கு 6 ஆயி ரம் கி.மீ. வேகத்தில் பறக் கும் திறன் கொண்டது.

சமீபத்தில் இந்த விமானத்தின் சோதனையில் மணிக்கு 8,600 கி.மீ. வேக திறனுடன் பறந்தது சென்றது.

இந்த விமான பயணத்திற்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டி வரும்.

பீஜிங்-நியூயோர்க் செல்ல ரூ.16 இலட்சம் கட்ட ணம் அறவிடுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

# அரிதாரம் பூசிய பலூன்கள் வெடித்துச் சிதறும் ரஜனி, கமல் மீது ஓ.பி.எஸ். மறைமுக தாக்குதல்

(சென்னை)



அரசியல் வானில் பறக்கும் அரிதாரம் பூசிய பலூன்கள் வெடித்துச் சிதறும் என அரசியல் களத்திற்கு வந்துள்ள ரஜனி, கமல் குறித்து துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் விமர்சனம் செய்துள்ளார்.

சென்னையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ஜெயலலிதா சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரிதாரம் பூசிய சிலர் மக்களை காக்க வந்த ரட்சகர்கள் போல வீரவசனம் பேசுகின்றனர். மக்களை காப்பாற்றப் போவது நாங்கள் தான் என்பவர்களின் பேச்சு விரைவில் புஸ்வாணமாகும்.

அரசியல் வானில் அரிதாரம் பூசிய வண்ண பலூன்கள் புதிது புதிதாக பறக்க தொடங்கியுள்ளன. அவை பார்க்க அழகாக இருந்தாலும், அவை வெடித்து சிதறுவதை நம் கண்முன்னே பார்க்கத் தான் போகிறோம்.

ஜெயலலிதா உயிரோடு இல்லாத சூழலில் எதிரிகளும் துரோகிகளும் சதித்திட்டம் தீட்டி வருகிறார்கள். அ.தி.மு.கவை வெல்ல நினைத்தவர்களின் கட்சிகள் எல்லாம் காற்றில்லாத பலூன்களாக சுருங்கி கிடக்கின்றன.

அ.தி.மு.கவின் வெற்றியை தடுக்கவும் இடையில் புகுந்து களவாடவும் சிலர் சதி செய்கின்றனர். அவர்களின் வஞ்சக வலையை அறுத்தெறிந்து கட்சியையும் ஆட்சியையும் ஒற்றுமையாக கட்டிக் காப்போம். எத்தனை தேர்தல்கள் வந்தாலும் அது எப்போது வந்தாலும் அதனை எதிர் கொண்டு வெற்றி காண்போம். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# அமெரிக்க மருத்துவக் கப்பல் இந்த ஆண்டும் இலங்கை வருகை

(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் மருத்துவக் கப்பலான யுஎஸ் என்எஸ் மேர்சி (USNS Mercy) இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மிகப்பெரிய மனிதாபிமான மற்றும் அனர்த்த மீட்பு தயார் நிலை நடவடிக்கையை அமெரிக்கா இந்த ஆண்டும் முன்னெடுக்கவுள்ளது.


பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகை என்ற பெயரிலான அமெரிக்காவின் இந்த நடவடிக்கையின் கீழ் கடந்த ஆண்டு யுஎஸ்எஸ் போல் ரிவர் என்ற கப்பலில் வந்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடற்படையினர் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்திருந்து மனிதாபிமான உதவிப் பணிகளை மேற்கொண்டனர்.



இந்த ஆண்டு யுஎஸ்என் எஸ் மேர்சி என்ற மருத்துவக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் கப்பல் இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணம் செய்யவுள்ளது.

கப்பலில் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த 800 கடற்படையினர் மற்றும் மருத்துவ அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர். (இ-7-10)

# கிழக்கை ஆர்ப்பரிக்கும் வலசை பறவைக்கூட்டம்



(கொழும்பு)

இயற்கை அழகு பொருந்திய கிழக்கு மாகாணத்தில் பெருமளவான பறவைகள் திரண்டுள்ளமை இந்த பகுதி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கல்முனை, மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள கல்லாற்று பாலத்தருகே வந்து குவியும் பறவைகள் மீன் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

வாவிகளிலும் ஆறுகளிலும் பறவைகள் திரண்டுள்ளமை மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7-10)

# மீதொட்டமுல்ல குப்பைமேட்டை பூங்காவாக மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு பகுதியில் நகர பூங்கா ஒன்று மற்றும் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான திட்டமிடல்களுக்காக விரைவில் சர்வதேச அளவில் கேள்வி மனு கோரப்படவுள்ளதாகவும் இந்த கேள்வி மனு அழைப்பிற்கு 6 தொடக்கம் 8 மாதங்கள் ஆகும் எனவும் தற்போதைய நிலையில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7-10)

# ஆண் பெண்ணாக மாறிய அதிசயம்

## தென்னிலங்கையில் பரபரப்பு



(கொழும்பு)

ஆணாகப் பிறந்து அழகான பெண்ணாக மாறிய இளைஞர் குறித்து செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் தென்னிலங்கை மக்கள் பலரும் குறித்த இளைஞர் தொடர்பாக பரபரப்பாக செய்தி வெளியிட்டுள்ளனர். அண்மையில் திருநங்கையாக மாறியவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"யாரா" என அழைக்கப்படும் இந்த திருநங்கை இலங்கையின் ஆடை அலங்காரத் துறையில் மிகவும் பிரபலமானவர் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஆணாக பிறந்து அழகிய யுவதியாக மாறியமையே இவரை இந்தத் துறையில் பிரபலமாக்கியது எனக் கூறப்பட்டுள்ளது.

அடிப்படையில் ஆணாக பிறந்த 'யாரா' இரண்டு வருடங்களுக்கு திருநங்கையாக மாறியதாகவும், மிக அண்மையில் ஒரு மணமகளாக மாறியதாகவும் யாராவைச் சார்ந்தவர்கள் கூறுகின்றனர்.

புகைப்பட தொகுப்பு ஒன்றுக்காகவே அவர் மணமகளாக மாற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### சிரமங்கள் சிறப்படைவதற்கே!

அந்தக் காலத்து ஆசாமிகள், "நான் ஒரு காலத்துல எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?" என்று ஆரம்பித்தால் "எனக்கு வேறு வேலை இருக்கு" என்று உடனே எழுந்து விடாதீர்கள். கேளுங்கள்.

"குடும்ப நண்பர் ஒருவரின் மகனுடன் பேசிக்கொண்டு இருந்தேன். என்ன வேலையில் இருக்கிறாய்?"

"ஒண்ணுமில்லை. சும்மாதான் இருக்கிறேன்."

"ஏதோ வேலையில் இருப்பதாகச் சொன்னார்களே?"

"அந்த வேலை ரொம்பக் கஷ்டமில்லை? சொல்லு! அதனால் விட்டுட்டேன்."

"எந்த வேலைதான் கஷ்டமில்லை? சொல்லு! ஒண்ணு கேக்குறேன். இன்னொரு வேலையைத் தேடிக்கிட்டு இதை விட்டிருக்கலாம்ல? இன்னுங்கூட கஷ்டப்படுறதுக்காகவா இருக்கிற வேலையை விட்டுட்டே? சௌகரியமான வேலைன்னு எதுவுமே கிடையாது தெரியுமா? என்னோட நண்பர் ஒருத்தர். ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் தான் வேலை. அப்புறம் நாள் பூரா ஃப்ரீன்னு சொல்லிக்கிட்டு ஒரு வேலையில் சேர்ந்தாரு. சமீபத்தில் அவரைச் சந்திச்சேன். எப்படிப்பா இருக்கு வேலைன்னு கேட்டேன். பொழுதே போகலை. ரொம்பக்கஷ்டமா இருக்குங்கிறாரு. ஒரு பெண் பிரசவ வலியைப் பெரிசா நெனைச்சா புள்ளை வெத்துக்க முடியுமா? என்ன ஆளுப்பா நீ! என்றேன். நண்பரின் மகன் இப்போது ஏதோ ஒரு வேலையில் இருப்பதாகக் கேள்வி."

அலுங்காமல் குலுங்காமல் அவ்வளவு சௌகரியமும் வேண்டுமென்றால் எப்படி? ஓட்டை உடைக்க சிரமப்பட்டுக் கொண்டு சுவையான பருக்கை இழப்பதாவது? கத்தியையும் எண்ணெயையும் தொடாவிட்டால் பலாப்பழம் எப்படி வெளியே வரும்?

சிரமப்படுதல் நடைபெறும் போது அதன் சிரமத்தை மட்டுமே எண்ணக்கூடாது. கூடவே சில விடயங்களும் நடைபெறுகின்றன என்பதை உணரவேண்டும்.

அதாவது சிரமங்கள் வரும்போது நம்மை விடிவு காலத்திற்கு இட்டுச் செல்லும் பணியும் தொடங்கிவிட்டது என்று பொருள். இதற்கு மேல் ஒன்று நடக்கிறது. அப்படியென்றால்?

நம் உடலும் மனமும் அந்தக் காலகட்டத்தில் நன்கு பழக்கப்பட்டும் பக்குவப்பட்டும் விடும் போது இதைவிடப் பெரிய உடல் சிரமங்களையும் உள்ளச் சிரமங்களையும் எதிர்கொள்ள நம்மையுமறியாமல் நாம் தயாராகி விடுகிறோம். இது மிக முக்கியமான அம்சம். காசும் வசதியும் மட்டுமல்ல வளர்ச்சி. இதுவும் வளர்ச்சிதான். கஷ்டங்கள் என்பவை அனுபவப் பாடங்கள். அவை வலிந்து திணிக்கப்படும் போது ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

பாடம் கஷ்டமாக இருக்கிறது என்பதற்காக முதலாம் வகுப்பிலேயே உட்கார்ந்திருக்க முடியுமா என்ன?

**லேனா தமிழ்வாணன்**

## இனவிடுதலைக்காக போராடியவர்கள் பயங்கரவாதிகளா?

# புலிக்கொடி ஏந்தி சுவிஸில் போராட்டம்



(பேர்ன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தி, அந்த இயக்கத்திற்காக உழைத்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நோக்கில் சுவிட்சர்லாந்து பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன இணைந்து தொடர்ந்துள்ள வழக்கைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தின் பேர்ன் நகரில் அந்த நாட்டு நாடாளுமன்றத்திற்கு முன்னால் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒன்று திரண்டு பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நேற்று மேற்கொண்டனர். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது சுவிட்சர்லாந்து உட்பட ஐரோப்பிய வாழ் ஏராளமான புலம் பெயர் தமிழர்கள் பங்கேற்றிருந்தனர். (இ-7)

## புத்தளத்திற்கு பொறுப்புள்ள அமைச்சு இல்லை கழுதைகளே உள்ளன- ரங்கே பண்டார விசனம்

(கொழும்பு)

புத்தளம் பிரதேசத்தில் அதிகமாக கழுதைகள் இருப்பதாகவே பலரும் கருதுகின்றனர் எனவும் இதனால் இப் பிரதேச மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள பொறுப்பான அமைச்சுப் பதவியொன்றை இந்த அரசாங்கம் இதுவரை வழங்கவில்லையெனவும் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். நேற்றுக் காலை புத்தளம் வைத்தியசாலைக்கு சென்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.




இன்று வழங்கப்படவுள்ள புதிய அமைச்சரவை சீர்திருத்தத்தில் புத்தளத்துக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் ஏதாவது வழங்கப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (7-10)

## நீண்ட நாட்களுக்குப் பின் மட்டக்களப்பில் மழை





(ஊறாவூர்)

மட்டக்களப்பில் மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் அதிக உஷ்ணத்துடன் கூடிய காலநிலை நிலவி வந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வேளையிலிருந்து மழை பெய்து வருகின்றது.

வருடாந்தம் டிசெம்பர் மற்றும் தை மாதங்களில் பெய்து வரும் அதிக மழை வீழ்ச்சி, இம்முறை குறைவடைந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான சிறுபோக வேளாண்மைச் செய்கையும் இவ்வருடம் செய்ய முடியாமல் போயுள்ளன.

இதனால் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் அதிக வரட்சியுடன் கூடிய காலநிலை காணப்பட்டு வந்தன. இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வேளையிலிருந்து மாவட்டத்தின் பரவலான இடங்களில் ஓரளவான மழை பெய்து வருவதுடன், வானமும் இருண்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் பகுதியில் 170.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 15.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 86.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 23.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மைலம்பாவெளி பகுதியில் 18.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பு நகர் பகுதியில் 21.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார். (இ-7)

## எரிபொருள், அரிசி இறக்குமதிக்கான செலவினம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தில் இறக்குமதி செலவு 2 ஆயிரத்து 100 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எரிபொருள் மற்றும் அரிசி இறக்குமதிக்கான செலவினம் அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

இதற்கு மேலதிகமான தங்கம் மற்றும் கோதுமை இறக்குமதிக்காக மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும் இயந்திர உபகரணங்கள், சீனி, உரம், பல சரக்கு முதலானவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் குறைந்த தொகையே செலவிடப்பட்டது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (இ-7)

## கடலில் மிதந்த மர்மத்திரவம் அருந்திய மீனவன் உயிரிழப்பு

(கொழும்பு)

கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றிலிருந்த திரவத்தை அருந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கராப்பிட்டிய வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யக்கமுல்ல - மாஹாகெதர என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த ரனபுரேஹேவகே கயான் மதுசங்க 29 வயதான நபர் உயிரிழந்துள்ளார்.

அண்மையில் காலி துறைமுகத்தின் ஊடாக உயிரிழந்த நபர் உள்ளிட்ட 7 பேர் மீன்பிடிப் படகு மூலம் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

இதன்போது கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றை இவர்கள் எடுத்து போத்தலில் இருந்த திரவத்தை படகில் பயணித்த இரண்டு பேர் அருந்தியுள்ளனர்.

இதில் மதுசங்க என்பவர் கரைக்கு திரும்பும் முன்னதாகவே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7-10)

## அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கடந்தாண்டு 183 கப்பல்கள் வருகை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம் றுஹுணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு 2017 ஆம் ஆண்டு 183 கப்பல்கள் வருகை தந்ததாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் 175 கப்பல்கள் சரக்குக் கப்பல்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 126, 514 தொன் பொருட்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளதுடன் 46 ஆயிரத்து 835 தொன் பொருட்கள் அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-10)

# தரம் 13 வரை எல்லா மாணவர்களும் கற்பதற்காக தொழில்முறைக் கல்வித் துறையின் அறிமுகம்

இலங்கையின் கல்வி வரலாற்றிலே ஒரு புரட்சிகரமான சிந்தனையாக கருதப்படுவது 13 வருட தொழில் முறைக் கல்வித்துறைப் பிரிவின் அறிமுகமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வருகின்ற பல நாடுகளில் தொழில் முறைக்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அனைவரும் பல வழிகளினூடாக பட்டம்பெறும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனைப் பின்பற்றியே இலங்கை கல்வி வரலாற்றிலும் புதிய திருப்புமுனையாக இப்பாட அறிமுகம் நோக்கப்படுகின்றது. இது மாணவர்களுக்கு வரப் பிரசாதமாக அமைவதோடு கல்வியில் தோல்வியடைந்தோர் என்று இல்லாமல் எல்லோரும் வாழ்வில் வெற்றி பெற்றவர்களாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்பவர்களாகவும் உருவாக்குவதாகும். அத்தோடுமாணவர்களின்வேலையின்மை தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் இப்பாட அறிமுகம் அமைகின்றது எனலாம்.

**13 வருட உத்தர வாதப படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

எல்லா பாடசாலை மாணவர்களுக்கும் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரைக்கும் தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் 13 வருட உத்தர வாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களையும் சித்தியடைந்தமை மற்றும் சித்தியடையாமை குறித்து கவனத்திற் கொள்ளாது அனைவரையும் உள்வாங்குதல். இப்பாடநெறியின் நோக்கமாகும்.

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ள தொழில் முறைக் கல்வியினை பெற்றுக்கொடுத்தல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசிய ரீதியில் 43 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் செயற் படுத்தப்பட்டு வருகின்றது.

க.பொ.த உயர்தர பாடத்துறைப் பிரிவுகளுக்குரித்தாக சுற்றுநிருபம் இல 2016/13 குறிப்பிடப்பட்ட பாடத்துறை 5 ஆகும். மேலதிகமாக தொழில்முறை கல்வித்துறை 6 ஆவது பாடத் துறை பிரிவாக அறிமுகப் படுத்தப்படவுள்ளது. அவை யாவன,

கலைத்துறை, வர்த்தகத்துறை ,உயிரியல் விஞ்ஞானத்துறை, பௌதிக விஞ்ஞானத்துறை, தொழில் நுட்பத்துறை, தொழில் முறைக் கல்வித்துறை

**தொழில்முறை கல்வித்துறை**

இப்பாடத்துறை 3 பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1.பொதுப்பாடத்துறை

2.பிரயோக விடயத்துறை

3.நிறுவனஞ்சார் தொழிற் பயிற்சி

**1.பொதுப்பாடத்துறை**

| இல | பொதுப்பாடத்துறை | அலகு எண்ணிக்கை | மணித்தியாலய அளவு |
|---|---|---|---|
| 1. | முதலாம் மொழி (சிங்களம்/தமிழ்) | 10 | 40 |
| 2. | பிரயோக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல்திறன் | 10 | 60 |
| 3. | அழகியல் நயப்பு | 04 | 40 |
| 4. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன் | 07 | 60 |
| 5. | பிரஜைத்துவத்துக்கான திறன் | 08 | 40 |
| 6. | சமூக நன்நிலவுகைக்கு தேவையான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள் | 7 | 40 |
| 7. | முயற்சியாண்மை திறன் | 06 | 40 |
| 8. | விளையாட்டு மற்றும் ஏனையபாட இணைச் செயற்பாடுகள் | -- | 30 |
| 9. | தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம் | -- | 60 |

**2. பிரயோகப் பாடங்கள்**

தரம் 12 கல்வி கற்கும் மாணவர்கள் இரண்டாம், மூன்றாம் தவணைகளுக்காக பிரயோகபாடங்கள் மூன்றினை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒரு பாடசாலைத் தவணையில் பாடம் ஒன்றிற்கு 100 மணித்தியாலம் என்ற அடிப்படையில் பாடத்திற்கும் 300 மணித்தியாலம் ஒதுககப்படும்.

1.பிள்ளை உளவியல் மற்றும் நலன் பேணல்

2.சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல்

3.உடற்கல்வி மற்றும் விளையாட்டு

4.அரங்காற்றல் கலைகள்

5.நிகழ்ச்சி முகாமைத்துவம்

6.கலையும் கைப் பணியும்

7.உள்ளக வடிவமைப்பு

8.புதுப்பாணி வடிவமைப்பு

9.கிரபிக் வடிவமைப்பு

10.கலையும் வடிவமைப்பும்

11.நிலத்தோற்ற வடிவமைப்பு

12.பிரயோக தோட்டக் கலை கற்கைகள்

13.கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக்கற்கைகள்

14.உணவு தயாரிப்பு தொழில் நுட்பக் கற்கைகள்

15.நீரியல் வள தொழில் நுட்பக் கற்கைகள்

16.பெருந்தோட்ட உற்பத்தி தொழில்நுட்பக் கற்கைகள்

17.நிர்மான தொழில் நுட்பம்

18.தானியங்கி இயந்திர தொழில்நுட்பக் கற்கைகள்

19.மின்மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கற்கைகள்

20.புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கற்கைகள்

21.உலோக நிர்மாண தொழில்நுட்பக் கற்கைகள்

22.அலுமினிய கட்டுமான தொழில்நுட்பக் கற்கைகள்

23.மென்பொருள் விருத்தி

24.இணையத்தள வடிவமைப்பு

25.உல்லாசப் பயணம் மற்றும் விருந்தோம்பல்

26.சுற்றாடல் கற்கைகள்

**3. நிறுவனஞ்சார் தொழிற்பயிற்சி**

♦தரம் 12 தெரிவு செய்த பிரயோக பாடங்கள் மூன்றில் ஒரு பாடத்தை மட்டும் 13 ஆம் தரத்தில் தெரிவு செய்து கற்கையை தொடர முடியும்.

♦ இப்பாடமானது பின் வருமாறு வகைப்படுத்தப்படும்.

1.பாடசாலையில் கற்க வேண்டிய மணித்தியாலம்

2.தொழின்முறை பயிற்சி பெற்றுக்கொள்ளும் மணித்தியாலம்

3.அனுப்ப வேண்டிய நிறுவனம்

**தொழிற் பாடத்துறையின் வளர்ச்சிப் போக்கு**

♦சகல பிள்ளைகளுக்கும் 13 வருட கல்வியினை பெற்றுக்கொடுப்பதை உறுதிப் படுத்தல்

♦க.பொ.த (சா/த) பரீட்சையில்சித்தியடையாதமாணவர்களுக்கு கல்வி வசதியினை பெற்றுக்கொடுத்தல்.

♦இப்பாடத்துறை மூன்று கட்டங்களாக நடைமுறைப் படுத்தப்பட வுள்ளது.

**முதலாம் கட்டம்**

♦2017 ஆம் ஆண்டில் ஒக்டோபர்மாதம் முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் 42 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1 ஆம் கட்டத்தில் 2017 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 42 பாடசாலைகளில் வட மாகாணத்தில் 5 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை யாவன.




1.யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

2.கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

3.மு/வித்தியானந்தா கல்லூரி

4.மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி

5.வ/காமினி ம.வி. வவுனியா

**முதலாம் கட்டத்தில் நடை முறைப்படுத்தப்பட்ட 42 பாடசாலைகள் விபரம்**

| இல | மாகாணம் | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேல் மாகாணம் | 6 |
| 2. | வடமேல் மாகானம் | 4 |
| 3. | ஊவா மாகாணம் | 5 |
| 4. | தென் மாகாணம் | 3 |
| 5. | வட மத்திய மாகாணம் | 2 |
| 6. | சப்பிரகமுவா மாகாணம் | 2 |
| 7. | மத்திய மாகாணம் | 6 |
| 8. | வட மாகாணம் | 5 |
| 9. | கிழக்கு மாகாணம் | 9 |
| | | 42 |

**இரண்டாம் கட்டம்**

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டாம் கட்டத்தில் 137 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவற்றிலே 16 பாடசாலைகள் வடமாகாணத்தைச் சேர்ந்தவை. அவற்றின் விபரம் பின்வருமாறு

♦இரண்டாம் கட்டம் 2018 ஆம் ஆண்டு மே மாதம் மேலும் 137 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1.யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

2.யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

3.யா/வேலணை மத்திய மகா வித்தியாலயம்

4.யா/மட்டுவில் மகா வித்தியாலயம்

5.யா/நெல்லியடி மத்திய கல்லூரி

6. யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

7. கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்

8. கிளி/ கனகபுரம் வித்தியாலயம்

9. மு/கலைமகள் மகா வித்தியாலயம்

10. மு/வல்லிபுரம் J.H.S

11. மு/ மல்லாவி மத்திய கல்லூரி

12. மன்/ வட்டக்கண்டல் G.T.M.V.

13. மன்/அல் அனா மகா வித்தியாலயம்

14. மன்/சென் லூசியஸ் மகா வித்தியாலயம்

15. வவு/ ஒலுமடு வித்தியாலயம்

16. வவு/மடுகந்த N.S.

இரண்டாம் கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 137 ஆகும்.

| இல | மாகாணம் | பாடசால்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேல் மாகாணம் | 17 |
| 2. | ஊவா மாகாணம் | 18 |
| 3. | தென் மாகாணம் | 13 |
| 4. | வடமேல் மாகாணம் | 12 |
| 5. | வட மாகாணம் | 16 |
| 6. | வட மத்திய மாகாணம் | 12 |
| 7. | மத்திய மாகாணம் | 20 |
| 8. | கிழக்கு மாகாணம் | 20 |
| 9. | சப்பிரகமுவா மாகாணம் | 9 |
| | | 137 |

**மூன்றாம் கட்டம்**

மூன்றாம் கட்டத்தில் க.பொ.த. உயர்தரம் உள்ள எல்லாப்பாடசாலைகளிலும் 2019 ஆம் ஆண்டில் இருந்து தொழில்முறைக் கல்வித்துறையில் மாணவர்கள் கற்பதற்கான வாய்ப்புக்கள் கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்படவுள்ளது.

இப்பாடநெறியில் கற்கக் கூடியவர்கள் 2017 ஆண்டு டிசெம்பர் மாதம் க.பொ.த. (சா/து) பரீட்சையில் தோற்றி பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு இம்மாணவர்களுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற் பாடத்துறையூடாக தொழிற் பயிற்சி நெறியினை பயின்று NVQ 7 சான்றிதழ் பெற்று வேலைவுலகில் பிரவேசிப்பதற்கு அரிய வாய்ப்புள்ளது.

பிலிப்பைன்ஸ், தாய்வான், தென்கொரியா போன்ற நாடுகளில் மாணவர்கள் பாடசாலையில் கற்றுக் கொள்கின்ற அதே சந்தர்ப்பத்தில் தொழிற்பயிற்சி பாடநெறிகளை பயின்று இறுதியில் தமக்கு வேண்டிய துறைகளை தெரிவுசெய்து வாழ்வு வெற்றி பெறுவதற்கு ஏற்ற வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**♦ க.பொ.த.(சா/த) பரீட்சை சித்தியடைந்த மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள்**

பாடசாலையில் க.பொ.த. (உ/த) கற்றல் → பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வாய்ப்பு

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கும் வாய்ப்பு → பட்டம் பெறுதல்

டிப்ளோமா சான்றிதழ் பெறல் →வேலை உலகிற்குள் நுழைதல்

**♦ க.பொ.த. (சா/த) பரீட்சை சித்தியடையாத மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள்**

க.பொ.த.(சா/த) சித்தியின்மை → பாடசாலையில் 13 வருட உத்தரவாதப் படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்

NVQ 3 சான்றிதழ் பெறல் → தொழில் நுட்பவியற் கல்லூரி பல்கலைக்கழக கல்லூரியில் கற்கும் வாய்ப்பு

(தொடரும்)

**வயவன் சிவசாகரன்**

# அரச வேலை வாய்ப்புக்கள் ஒரே பார்வையில்...

**01. பதவி:-** மகளிர் உதவிப் பொலிஸ் பரிசோதகர் (சாதாரணம்).

நிறுவனம்- பொலிஸ் திணைக்களம்.

விண்ணப்ப் இறுதி நாள்- 02.04.2018.

மேலதிக விாரங்கள்- வர்த்தமானி 26.01.2018.

**02. பதவி:-** உதவிப் பொலிஸ் பரிசோதகர்.

நிறுவனம்- பொலிஸ் திணைக்களம்.

விண்ணப்ப இறுதி நாள் - 02.04.2018.

மேலதிக விபரங்கள்- வர்த்தமானி 26.01.2018.

**03. பதவி:-** தொழில்நுட்ப உதவியாளர்.

நிறுவனம்- நீர்ப்பாய்ச்சல் திணைக்களம்.

விண்ணப்ப இறுதி நாள்- 16.03.2018.

மேலதிக விபரங்கள்- வர்த்தமானி 16.02.2018.

**04.பதவி:-** வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி.

நிறுவனம்- வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம்.

விண்ணப்ப இறுதி நாள்- 15.03.2018.

மேலதிக விபரங்கள்- வர்த்தமானி 16.02.2018.

**05. பதவி:-** காட்டிலாக்கா அதிகாரி (திறந்த)

நிறுவனம் -வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம்.

விண்ணப்ப இறுதி நாள்- 15.03.2018 மேலதிக விபரங்கள்- வர்த்தமானி 16.02. 2018.

**06. பதவிகள்:-** முகாமையாளர், உதவி முகாமையாளர்.

நிறுவனம் -இலங்கை மாநாட்டுப் பணியகம்.

விண்ணப்ப இறுதி நாள் - 01.03.2018.

**07. பதவி:-** ஆய்வு உதவியாளர்.

நிறுவனம்- தேசிய அடிப்படைக் கல்வி நிறுவனம்.

விண்ணப்ப இறுதி நாள்- 07.03.2018.

**08. பதவி:-** வேலை வொறியியலாளர் (சிவில்) Works Engineer (civil), விரிவுரையாளர் (தகுதி காண்), சிரேஷ்ட விரிவுரையாளர்.

நிறுவனம்- கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி.

விண்ணப்ப இறுதி நாள்- 09.03.2018.

மேலதிக விபரங்கள்- www.ucsc.cmb.ac.lk.

**08. பதவி:-**பிரதிப் பணிப்பாளர் நாயகம்.

நிறுவனம்- இலங்கை சுற்றுலா மற்றும் உணவக முகாமைத்துவ நிறுவனம்.

விண்ணப்ப இறுதி நாள்- 01.03.2018.

**09. பதவி:-** ப்ணிப்பாளர்

நிறுவனம்- கொழும்பு பல்கலைக்கழகம்.

விண்ணப்ப இறுதி நாள்- 12.03.2018.

**10.பதவி:-** சாரதி, தொழில்நுட்பவியலாளர், (சிவில், இயந்திரவியல், தச்சுவேலை, மேசன்வேலை).

நிறுவனம்- உச்சநீதிமன்ற வளாக முகாமைத்துவ சபை.

விண்ணப்ப இறுதி நாள்- 08.03.2018. (ம)

# அரச முகாமைத்துவ சேவையில் மேலும் ஆறாயிரம் பேர் இணைப்பு

## பணிப்பாளர் நாயகம் கமகே தகவல்

(கொழும்பு)

அரசமுகாமைத்துவசேவையில் மேலும் ஆறாயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக அரச நிர்வாக அமைச்சின் ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகம் திருமதி கே.வி. பி.எம்.ஜே.கமகே தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் பரீட்சை மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சையில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமீபத்தில் நடைபெற்ற பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகள் தற்பொழுது இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மாவட்ட மட்டத்தில் அரச முகாமைத்துவ சேவைக்கு தகுதி பெற்றுள்ளவர்களுக்கான வெட்டுப்புள்ளிகளை இணையத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும். தகுதி பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இதன்போது சான்றிதழ்கள் பரிசோதிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்ற ஆயிரத்து 477 பேரும் பகிரங்க பரீட்சையில் சித்தி எய்திய மூவாயிரத்து 905 பேரும் அரச முகாமைத்துவ சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான காலப்பகுதியில் அரச முகாமைத்துவ சேவையில் நிலவிய அனைத்து வெற்றிடங்களும் இவர்களைக் கொண்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (இ-7)

# விவசாயிகளுக்கு பணத்துக்குப் பதில் பசளை வழங்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரமானியத்துக்குப் பதில் நேரடியாக பசளை வகைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைக்கு நெல் உள்ளிட்ட பல்வேறு விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்கு உரமானியம் வழங்கப்படுகின்றது. இதற்காக வருடந்தோறும் சுமார் 38 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது.

எனினும் சந்தையில் பசளை வகைகளுக்கான தட்டுப்பாடு பாரியளவில் நிலவுகின்றது.

இந்நிலையில், உரமானியத்துக்குப் பதில் விவசாயிகளுக்கு நேரடியாக பசளை வகைகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கு வசதியாக வருடம் முழுவதற்கும் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் பசளைகளை சேகரித்து களஞ்சியப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (இ-7)

# பிரத்தியேக வகுப்புக்கள் நடத்த தடை

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் பிரத்தியேக வகுப்புகளை பகல் ஒரு மணிவரை நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கவினால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஆளுநரின் பணிப்புரைக்கமைவாக ஞாயிறு தினங்களில் சமூக ஆன்மீக வளர்ச்சிக்கு ஏதுவாக அன்று பகல் ஒரு மணிவரை தனியார் வகுப்புகளை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (இ-7)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1340

Search for people, places and things Nagendram Home

சரண்யா

சொக்லேட் சாப்ட்டா பல் விழும்னு சொல்றாங்க



வாங்க வீட்ல சொக்லெட் சாப்ட்டா அடில விழுது

டனு டனுசியா

காதலிக்கிற பெண்ணை காதலின்னு சொல்றோம்



அப்ப கல்யாணம் பண்ணா கல்யாணினுதானே சொல்லனும்

தனுஷ்காந்

வகுப்பறையில் முதல் Bench இல் இருப்பவன் புத்தகத்தையும்



கடைசி Bench இல் இருப்பவன் வாழ்க்கையையும் படிக்கிறான்

பிரவீன்

அப்பா: ஏன் செல்லம் அழுகிற? மகன்: அம்மா அடிச்சிட்டாங்க



அப்பா: அம்மாதானே அடிச்சாங்க, அழாதே மகன்: உங்களுக்கும் பழகிப் போச்சு... எனக்கு வலிக்குதுப்பா...

ரேவதி

நாளைக்கு எனக்கு ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா நீதான்டா பார்த்துக்கனும்



போ யாட்டி... நாளைக்கு எனக்கு ஸ்கூல் இருக்கு...

சித்ரா

கிச்சன்ல இருந்து வாசன வந்தா அது அம்மா சமையல்



ஒன்னு... வாசன வருதா இல்லையான்னு சவுண்டு வந்தா அது பொண்டாட்டி சமையல்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. மகிந்த ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கான ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் இரத்து செய்யப்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் மீளவும் இலங்கைக்கு இந்த வரிச் சலுகைத் திட்டம் வழங்கப்பட்டது.

எனினும், வரிச் சலுகைத் திட்டத்தை அனுபவிப்பதற்கான சில அடிப்படைத் தகுதிகளை நல்லாட்சி அரசாங்கம் பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் சில விடயங்களை உரிய முறையில் அமுல்படுத்தத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வரிச் சலுகை வழங்குவது தொடர்பான நிபந்தனைகளை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளதா என்பதனை கண்டறியும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் நடத்திய மீளாய்வின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் மந்த கதி நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளது. (இ-7)

## முன்னாள் ஜனாதிபதியை விட அதிக சொத்துமதிப்புடன் கருணா



(வோஷிங்டன்)

இலங்கை அரசியல்வாதிகளில் அதிகம் பணக்காரர்களான முதல் பத்துப் பேரின் பெயர் வரிசையை அமெரிக்காவின் புகழ் பெற்ற வர்த்தக இதழான சஞ்சிகையை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இந்த வரிசையில் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணாவும் தமிழ் அரசியல்வாதிகள். இவர்களது சொத்து மதிப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை விட அதிகமாக இருப்பது ஆச்சரியமான அதிர்ச்சியளிக்கும் தகவல்.

அந்த சஞ்சிகையின் படி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு தான் முதலிடம், அவரது சொத்து மதிப்பு 18 பில்லியன் அமெரிக்க டொலர் அதாவது 1800 கோடி டொலர். இலங்கை ரூபாவின் படி சுமார் 2 இலட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபா. முதல் 10 கோடீஸ்வர அரசியல்வாதிகள்.

முதலாமிடம் - மகிந்த ராஜபக்ஷ (18 பில்லியன் டொலர்)

இரண்டாமிடம் - அமைச்சர் அர்ஜுன ரணதுங்க (6 கோடி 80 இலட்சம் டொலர்)

மூன்றாமிடம் - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (1கோடி 40 இலட்சம் டொலர்)

நான்காமிடம் - ஆறுமுகம் தொண்டமான் (19 லட்சம் டொலர்)

ஐந்தாமிடம் - கருணா (17 இலட்சம் டொலர்)

ஆறாமிடம் - ஏ.எச்.எம். பௌசி (14 லட்சம் டொலர்)

ஏழாமிடம் - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க (14 இலட்சம் டொலர்)

எட்டாம் இடம் - ஜே.வி.பியின் எம்.பியான அநுரகுமார திஸாநாயக்க (13 இலட்சம் டொலர்)

ஒன்பதாம் இடம் - ஏ.எல்.எம். அதாவுதுல்லா (9 இலட்சம் டொலர்)

பத்தாம் இடம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 8 இலட்சத்து 60 ஆயிரம் டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பிக்குவின் தாக்குதலுக்கு இலக்கான மாணவன் வைத்தியசாலையில்!

(கொழும்பு)

பஸ்ஸர - மடுகஸ்தலாவ கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமைபுரியும் பிக்கு ஒருவர் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரை மூர்க்கத்தனமாக தாக்கியதில் அந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வீட்டு வேலை செய்யாத மாணவர்களுக்கு குறித்த பிக்கு தண்டனை வழங்கியுள்ளார்.

இதன்போது, ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனுக்கு தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குருநாகல் மாவத்தகம சாமோதய தேசிய பாடசாலையில் 3 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவரை தாக்கிய ஆசிரியர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில், ஆசிரியரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாவத்தகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியரின் ஆலோசனைகளுக்கு அமைய, மூங்கில் தடியில் மாணவனை சங்கிலியால் கட்டி ஏனைய மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கல்வித்துறை பொறுப்பதிகாரிகளிடம் கோரப்பட்ட அறிக்கை இன்று திங்கட்கிழமை கிடைக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதேவேளை, மகியங்கனையில் காணாமற் போன 12 வயதான சிறுமியொருவர் வெல்லவாய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தமது சிறு தந்தையால் சித்திரவதை செய்யப்படுவதனால் தாம் வீட்டில் இருந்து தப்பிச் சென்றதாக சிறுமி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (இ-7)

## ஹொரணை பிரதேச சபையை கூட்ட போதிய இடவசதியில்லை

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பிரதேச சபைக்கான கூட்டத்தைக் கூட்டுவதற்கு போதிய இடவசதியில்லாமல் இடநெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் 23 உறுப்பினர்களுடன் ஹொரணை கனன்விலயில் அமைந்துள்ள பிரதேச சபையின் பிரதான காரியாலயத்திலேயே கூட்டம் நடைபெற்று வந்தது.

இம்முறை 51 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த இடநெருக்கடியை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக பிரதேச சபையின் கீழ் இங்கிரிய நகரில் இயங்கிவரும் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் கூட்டத்தை நடத்தும் யோசனை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 உறுப்பினர்களில் 16 பேர் புது முகங்கள் என்பதுடன், இவர்களில் பொன்னையா சரவணராஜ் என்ற தமிழர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எஞ்சிய 14 உறுப்பினர்களும் முன்னாள் உறுப்பினர்கள் ஆவர். ஐ.தே.கவில் தெரிவு செய்யப்பட்டுள்ள 14 உறுப்பினர்களும் புதுமுகங்கள் என்பதுடன், போட்டியிட்ட முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் தோல்வியடைந்துள்ளனர். (இ-7)

## புலம்பெயர் தமிழர்களுக்கு பயப்படும் நாமல் ராஜபக்ஷ?



(லண்டன்)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ லண்டனுக்கான விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், அவர் லண்டனில் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்கு பயந்து தனது விஜயத்தினை இரகசியமாக பேணி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநலவாய மாநாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ லண்டன் சென்றுள்ளார்.

தனது பயணம் தொடர்பில் அவர் இரகசியம் காப்பதாகவும், தனது நடவடிக்கைகள் அனைத்தையும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பதிவிடும் நாமல் இந்த பயணம் தொடர்பில் இரகசியம் காப்பது புலம்பெயர் தமிழ் மக்களுக்கு பயந்துதான் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர் லண்டன் சென்றிருக்கும் தகவல் புலம்பெயர் தமிழர்களுக்கு தெரிந்தால் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என கூறப்படுகின்றது.

அத்துடன், இவருக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் போராட்டங்களை நடத்தலாம் என எண்ணியே அவரது பயணம் தொடர்பில் இரகசியம் பேணப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## விபத்தில் மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

பல்மை - வதுபொல வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவனொருவன் உயிரிழந்ததுடன் இரண்டு பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்மை - பொத்துகுளம் பிரதேசத்தினை சேர்ந்த 16 வயதுடைய ஹசேல் திசநாயக்க எனும் பாடசாலை மாணவனே நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தின் போது உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பல்மை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அரசு தயாரித்த நகைச்சுவை நாடகத்தின் ஒரு பகுதியே அமைச்சரவை சீர்திருத்தம்

## இராஜாங்க அமைச்சர் வசந்த விசனம்



(கொழும்பு)

அரசாங்கம் தயாரித்துள்ள நகைச்சுவை நாடகத்தின் ஒரு கட்டமே தற்பொழுது அரங்கேற்றப்பட்டதாகவும் இதன் அடுத்த கட்டம் இன்னும் சில தினங்களில் அரங்கேற்றப்படும் எனவும் இதனைப் பார்க்கும் மக்கள் சிரிப்பார்களா? அல்லது அழுவார்களா? என்பது தெரி யாது எனவும் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க விமர்சித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை சீர்திருத்த நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இடம் பெறவில்லையென்றே நான் கருதுகின்றேன். இவற்றின் மூலம் மக்களை ஏமாற்ற முடியாது.

இதன்போது, தாங்கள் சொல்லும் மாற்றம் என்பது, பிரதமர் மாற வேண்டும் என்பதனையா குறிப்பிடுகின்றது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய போது,

ஆம், அதனை ஒழுங்கான வழியிலோ அல்லது மாற்று வழியின் ஊடாகவோ செய்ய வேண்டும் எனவும் அவர் பதிலளித்தார். (இ-7)

# குப்பிளானில் நேற்று உருளைக்கிழங்கு அறுவடை விழா





(படங்கள்:-பொ.சோபிகா)



யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சமாசத்தின் ஏற்பாட்டில் உருளைக் கிழங்கு அறுவடை விழா நேற்று குப்பிளான் விவசாயிகள் விளை நிலத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் இ.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தந்தையும் அவரின் பிரத்தியேக செயலாளருமான சதாசிவம் இராமநாதன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சி.சிவகுமார், கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் இ.நிசாந்தன், உடுவில் பிரதேச செயலாளர் திருமதி.மதுமதி வசந்தகுமார் உட்பட அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# காணாமற்போனோர் செயலகத்திற்கான ஆணையாளர்களுக்கு ஜனாதிபதி அனுமதி

## சபாநாயகர் கரு ஜெயசூரிய தகவல்



(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான செயலகத்திற்காக அரசியலமைப்பு பேரவை பரிந்துரைத்த ஆணையாளர்களின் பெயர்ப் பட்டியலுக்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம், அரசியலமைப்பு பேரவைக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பான செயலகம் குறித்த சட்டமூலம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் நிறைவேற்றப்பட்டது. செயலகத்திற்கான ஆணையாளர்கள் நியமனத்தில் இணக்கம் ஏற்படாத காரணத்தினால், செயலகம் இயங்குவது தாமதமாகி வந்தது.

அரசியலமைப்பு பேரவை விண்ணப்பங்கள் கோரியிருந்ததுடன் 8 பேரின் பெயர்களை தெரிவு செய்து, ஜனாதிபதிக்கு பரிந்துரைத்திருந்தது.


இதற்கு தற்போது ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதால், காணாமற்போனோர் தொடர்பான செயலகம் தனது பணிகளை ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாக உள்ளது. இதனால், காணாமல் போனோர் தொடர்பான செயலகத்தை ஸ்தாபிக்கும் முன்னேற்றம் குறித்து பேரவையில் அறிக்கையிட அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது எனவும் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

எது எப்படி இருந்த போதிலும் அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை ஏமாற்ற நீண்டகாலம் தாமதித்து காணாமல் போனோர் தொடர்பான செயலகத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)




# பாடி சொன்ன அட்வைஸ்



ஒரு காட்டில் பெரிய ஆண் புலி ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் மதிய வெயிலில் மிகப் பெரிய காட்டுமானை அடித்துக் கொன்று, பிறகு மெதுவாக மான் இறைச்சியை ரசித்து உண்ண ஆரம்பித்தது. வயிறு முட்ட உண்ட பிறகு தாகம் எடுத்தது. நேராகக் குட்டையை நோக்கிச் சென்றது. சிறிது தொலைவில் மரங்கள் அடர்ந்த பகுதியில் குட்டைத் தண்ணீர் தேங்கி இருந்தது. அந்த இடத்திற்கு புலி சென்றபோது, ஒரு பன்றிக் குட்டி குட்டையில் குளித்து, நீச்சல் அடித்துக் கொண்டிருந்தது.

புலியைப் பார்த்த பன்றிக் குட்டிக்கு பயம் ஏற்பட்டது. குலை நடுங்கியது. தண்ணீரில் இருந்து வெளியே வந்து கரையில் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றது. புலி அந்தப் பன்றிக் குட்டியை கண்டு கொள்ளவே இல்லை. அதற்கு தாகம் அதிகமாக இருந்ததால் தண்ணீர் குடிக்கும் ஆர்வத்தோடு குட்டையை நெருங்கியது. தலையைக் குனிந்து குட்டைத் தண்ணீரில் வாய் வைத்தது. தண்ணீர பன்றிக் குட்டியின் குளியலால் நாற்றம் எடுத்தது.

துர்நாற்றம் வீசுவதைப் புலியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, வேண்டா வெறுப்பாக ஒருமுறை தண்ணீரை நாக்கால் நக்கியது. ஆனால், குடிப்பதற்கு அதற்கு மனமே வரவில்லை. எனவே, அது பன்றிக் குட்டியைப் பார்த்து உறுமிவிட்டு, வேறு நல்ல தண்ணீர இருக்கும் இடத்தை தேடிச் செல்ல ஆரம்பித்தது. புலி வந்ததையும், தன்னைக் கண்டதையும், பிறகு தண்ணீர் குடிக்காமல் திரும்பிச் செல்வதையும் பார்த்தது பன்றிக் குட்டி.

"ஓகோ, இந்தப் புலி என்னைப் பார்த்து பயந்து போய்விட்டது. அதனால்தான் தண்ணீர குடிக்காமல் வந்த வேகத்திலேயே திரும்பிச் செல்கிறது". என்று தப்புக் கணக்குப் போட்டது பன்றிக் குட்டி. "இளங்கன்று பயம் அறியாது' என்ற பழமொழிக்கு ஏற்ப,ஒரே தாவாகத்தாவி புலியின் முன்னே சென்று நின்றது. "என்னைப் பார்த்து ஏன் ஓடுகிறாய்? வா, நாம் இருவரும் சண்டை செய்யலாம்," என்று அழைத்தது. பன்றியின் வார்த்தைகளைக் கேட்டு பக்கத்து மரக்கிளைகளில் இருந்த குரங்குகள் ஆச்சரியம் அடைந்தன. பன்றிக் குட்டிக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று பயத்தோடு பார்த்தன. "இனிமேல் பன்றிக் குட்டியின் உயிரை யாராலும் காப்பாற்ற முடியாது. அது எமலோகத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது விட்டது!" என்றது ஒரு செம்முக மந்தி. மான் கறியை வயிறு முட்டத் தின்று விட்டதால் பசி, அடங்கிப் போன புலி, பன்றிக் குட்டியை அலட்சியத்தோடு பார்த்து, "இன்றைக்கு வேண்டாம் நாளை இதே இடத்திற்கு வா. நாம் பலப்பரீட்சை செய்து பார்க்கலாம்," என்று சொல்லி விட்டுச் சென்றது.

"இந்தப் புலி சரியான பயந்தாங்கொள்ளியாக இருக்கிறது. அதனால்தான் இன்று வேண்டாம், நாளைக்கு வருகிறேன் என்றது," என்று நினைத்த பன்றிக் குட்டிக்கு கர்வமும், சந்தோஷமும் தாங்க முடியவில்லை. அது கத்திக்கொண்டே தன் இருப்பிடத்திற்குச் சென்றது. தாயிடம், உறவினரிடம் புலியுடன் தான் சண்டை செய்யப் போவதைச்சொன்னது. இதைக் கேட்ட பன்றி குடும்பத்திற்குப் பயம் பிடித்துக் கொண்டது.

**தொடரும்...**




❖1606-டச்சு நாடுகாண்பயணி வில்லெம் ஜான்சூன் அவுஸ்திரேலியாவைக் கண்ட முதலாவது ஐரோப்பியர்.

❖1748-ஜேக்கப் டி ஜொங் (இளை) யாழ்ப்பாணத்தின் டச்சுக் கமாண்டராக நியமிக்கப்பட்டார்.

❖1794-கோப்பன்ஹேகன் நகரில் கிறிஸ்டியன்போர்க் அரண்மனை தீயில் எரிந்து அழிந்தது.

❖1815- நெப்போலியன் பொனபார்ட் எல்பாவில் இருந்து தப்பினான்.

❖1991- உலகம் பரவிய வலையை (WWW) அறிமுகப்படுத்திய டிம் பெர்னேர்ஸ்-லீ நெக்சஸ் என்ற உலகின் முதலாவது இணைய உலாவியை அறிமுகப்படுத்தினார்.

**பிறப்புகள்**

❖1564-கிறிஸ்தோபர் மார்லொவ், ஆங்கிலேயக் கவிஞர், எழுத்தாளர் (இ. 1593)

❖1780-கிறிஸ்ரியன் சாமுவேல் வெயிசு, செருமானியக் கனிமவியலாளர் (இ. 1856)

❖1898-கோபால் சுவரூப் பதக், இந்தியாவின் 4வது குடியரசுத் துணைத் தலைவர் (இ. 1982)

❖1903-கியூலியோ நட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய வேதியியலாளர் (இ. 1979)

❖1928-ஏரியல் சரோன், இஸ்ரேலின் 11வது பிரதமர் (இ. 2014)

❖1947-தாராபாரதி, தமிழகக் கவிஞர் (இ. 2000)

❖1952-தங்கேஸ்வரி கதிராமன், இலங்கை வரலாற்றாளர், எழுத்தாளர்

❖1982-லீ நா, சீன டென்னிஸ் வீராங்கனை

❖1986-மா.கா.பா ஆனந்த், தமிழக நடிகர், தொலைக்காட்சித் தொகுப்பாளர்

**இறப்புகள்**

❖1878-ஏஞ்செலோ சேச்சி, இத்தாலிய வானியலாளர் (பி. 1818)

❖1887-ஆனந்தி கோபால் ஜோஷி, இந்திய மருத்துவர் (பி. 1865)

❖1931-ஓட்டோ வாலெக், நோபல் பரிசு பெற்ற செருமானிய வேதியியலாளர் (பி. 1847)

❖1933-சிவகங்கை இராமச்சந்திரன், தமிழக செயற்பாட்டாளர் (பி. 1884)

❖2004-எசு. பி. சவாண், இந்திய அரசியல்வாதி (பி. 1920)

❖2008- டிரோன்பெர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி (பி. 1941)

❖2014-கே. எஸ். பாலச்சந்திரன், இலங்கை-கனேடிய எழுத்தாளர், நாடகக் கலைஞர் (பி. 1944)

❖2015-அவிஜித் ராய், அமெரிக்க-வங்கதேச செயற்பாட்டாளர், பொறியியலாளர் (பி. 1972)

❖2017- எஸ். ஜி. சாந்தன், ஈழத்துப் பாடகர், நாடகக் கலைஞர்

**சிறப்பு நாள்**

❖விடுதலை நாள் (குவைத்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 60 | 80 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 60 | 80 | 70 | 100 | 80 |
| தக்காளி | 40 | 30 | 20 | 40 | 40 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 50 | 40 | 30 |
| கோவா | 50 | 40 | 50 | 60 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 |
| பூசணி | 80 | 40 | 40 | 60 | 50 | 60 | 50 |
| புடோல் | 50 | 100 | 40 | 80 | 70 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 60 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 130 | 140 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 40 | 100 | 40 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 150 | 120 | 120 | 120 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 200 | 160 | 200 | 180 |
| பீற்றூட் | 50 | 30 | 40 | 60 | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 700 | 70 | 150 | 100 | 120 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 400 | 600 | 800 | 700 |
| இஞ்சி | 150 | 140 | 85 | 80 | 120 | 200 | 150 |
| கத்தரிதம்பளை | 80 | 30 | 80 | 60 | — | 80 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 20 | 40 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 40 | 80 | 100 | 80 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80-100 | 35-80 | 100 | 65 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | 180 | 160 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 100 | 100 | 120 | 120 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 80 | — | 100 | 70 |

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
– *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணையை கூட்டாக வலியுறுத்துவோம்

வன்னி யுத்தத்தைத் தொடர்ந்து சர்வதேச போர்க்குற்ற விசாரணை தேவை என நாம் வலியுறுத்தியிருந்தால், இன்று தமிழ் மக்களின் நிலைமை வேறாக இருந்திருக்கும்.

என்ன செய்வது எழுதாக்குறைக்கு அழுதால் தீருமோ என்பதுபோல் எங்கள் தமிழ் அரசியல் தலைமையை இலங்கை ஆட்சியாளர்கள் வாலாயப்படுத்தி தம் வசமாக்கிக் கொண்டனர்.

இதனால் சர்வதேச விசாரணை என்பதை நம் அரசியல் தலைமை வலியுறுத்தத் தவறியது.

இலங்கை அரசாங்கம் ஏதோவொரு அரசியல் தீர்வைத் தரும். அதனை நாம் பெற்றுக் கொண்டால் போதும் என்ற நிலைப்பாடே நம் அரசியல் தலைமையிடம் இருந்தது.

தமிழ் மக்கள் நம்பி வாக்களிக்க, அவர்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் ஆசனத்தைப் பிடித்த நம்மவர்கள் நமக்குத் துரோகம் செய்வார்கள் என்று எவரும் நினைத்திருக்கவில்லை.

பரவாயில்லை நம் அரசியல் தலைமை இலங்கை அரசுக்குச் சார்பாகச் செயற்படுகிறது. சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடந்து முடிந்து விட்டது என்று பச்சைப் பொய் பேசுகிறது என்பதைக்கூட, உணரமுடியாத மக்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள் எனும் போது அதனை அவர்களின் அறியாமை என்றே தமிழ் அரசியல் தல்லமை கருதியது.

ஆனால் உண்மையில் எம் மக்களின் தன்மை அதுவல்ல. எங்கள் அரசியல் தலைவர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதி தந்துள்ளார்கள். அவர்கள் எங்களுக்கு கெடுதி செய்யமாட்டார்கள். அவர்கள்தான் என்ன செய்ய முடியும்; அவர்கள் இயன்றவரை நமக்காகக் கதைக்கிறார்கள் என்ற நம்பிக்கையைத் தவிர எம் மக்களிடம் வேறு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை என்பதே உண்மை.

தமிழ் அரசியல் தலைமையை பரிபூரணமாக நம்பிய தமிழ் மக்களுக்கு தமிழ் அரசியல் தலைமை செய்த பச்சைத் துரோகத்தை யார் மன்னித்தாலும் அந்த இறைவன் மன்னிக்க மாட்டான். இது சத்தியம்.

பிள்ளையை இழந்து; குடும்பத்தைப் பறிகொடுத்து; பெற்றோரை இழந்து பரிதவிக்கும் ஒரு இனத்தின் விடியலுக்காகப் பாடுபட வேண்டியவர்கள் குற்றம் புரிந்தவர்களைக் காப்பாற்ற நினைத்தமை கொடுமையிலும் கொடுமை.

அதேநேரம் ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாண்ட உலக நாட்டுப் பிரதிநிதிகளும் ஐ.நா பிரதிநிதிகளும் இலங்கையில் தமிழின அழிப்பு நடந்துள்ளது – போர்க் குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என்றே தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

குறிப்பாக நவநீதம்பிள்ளை அம்மையார் மற்றும் அல் ஹுசைன் போன்றவர்கள் அன்று முதல் இன்றுவரை சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் இவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டிய நம் தமிழ் அரசியல் தலைமை இலங்கை அரசாங்கத்துக்காகக் குரல் கொடுத்தது என்றால் இதைவிட்ட அநியாயம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

என்ன செய்வது நடந்தது நடந்துவிட்டது. இனிமேலாவது சர்வதேச விசாரணையை ஒட்டுமொத்தத் தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையாகக் கேட்போம்.

அது ஒன்றுதான் எங்களுக்கான உரிமையை இலங்கை அரசிடம் இருந்து பெற்றுத் தரும்.

# நல்லாட்சி கூட்டு அரசாங்கம் வேலைவாய்ப்பை தரவில்லை

## வேலையற்ற பட்டதாரிகள் குற்றச்சாட்டு

(அம்பாறை)

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும், தமிழ் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை வழங்க முடியாத நிலையே உள்ளது என அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் தலைவர் ஏ.எச்.எம். நஸ்ருதீன் குற்றம் சாட்டினார்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அம்பாறை காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில், "மத்திய அரசினால் அனுமதி வழங்கப்பட்ட 4700 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களில் 1400 பேருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கே தமிழ் பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் எடுத்து சித்தியடைந்த பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பட்டதாரிகள் இருக்கும் நிலையில், பரீட்சையில் தோல்வியுற்ற பட்டதாரிகளின் 247 பேரினுடைய பெயர்ப் பட்டியலை வெளியிட்டிருப்பதானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகத்தான் பார்க்க வேண்டியிருக்கின்றது.

ஆகவேதான் எதிர்வரும் 3ஆம் திகதி 247 பேருக்கும் வழங்கவிருக்கும் ஆசிரிய நியமனத்தினை இரத்துச் செய்து, அனைத்து பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இங்கு பெண் பட்டதாரியொருவர் கருத்துக் கூறுகையில், "தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதாக கூறுகின்றவர்கள், கல்வி கற்று பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு அதற்கான முன்னுரிமையை வழங்கவில்லை.

இந்த நாட்டிலே 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தம் மீண்டும் ஏற்படுவதற்கு இந்த அரசாங்கம் காரணமாக இருக்கக் கூடாது. எமது சாத்வீகமான போராட்டம் வன்முறையாக மாறாதளவிற்கு பார்க்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு உள்ளது" எனத் தெரிவித்தார்.

இவ்வூடக சந்திப்பில் அதன் தலைவர் ஏ.எச்.எம். நஸ்ருதீன், செயலாளர் ஏ.எஸ்.ரினோஸ், பொருளாளர் கே.சுரேஸ் மற்றும் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம)

### திருகோணமலை நகர்ப் பகுதியில்

## ஹெரோயின், கஞ்சாவுடன் இருவர் பொலிஸாரால் கைது

திருகோணமலை நகரில் ஹெரோயின் மற்றும் கேரள கஞ்சா போதை மாத்திரைகளுடன் இரண்டு பேர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக திருகோண மலை பொலிஸார் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 710 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை நீதிமன்ற வீதியில் வைத்து 5 கிராம் கேரள கஞ்சா மற்றும் 7 போதை மாத்திரைகளுடன் பிறிதொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம)

## கட்டுப்பாட்டை இழந்த ஜீப் 35 அடி பள்ளத்தில் பாய்ந்தது

### மூவர் படுகாயம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியில் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்திற்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11.35 மணியளவில் ஜீப் ரக வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 35 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் அதில் பயணம் செய்த மதகுரு உட்பட மூவர் கடும்காயங்களுக்குள்ளாகி மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியாங்கனை ஹசலக பகுதியிலிருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்காக சென்று மீண்டும் மஹியாங்கனை ஹசலக பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தபோதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாகன சாரதிக்கு வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் சமணலங்குளம், குளவிசுட்டான், நெடுங்கேணி, இறம்பைக்குளம், தண்டுவன், ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியமலை, பட்டிக் குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில புளியங் குளம், பெரியமடு, சின்ன அடம்பன், நைனாமடு, மதியா மடு, நொச்சிக்குளம், பழையவாடி, நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி மொபிடெல் கோபுரம், நெடுங் கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி நீர்ப் பாசன சபை, தண்டுவன் பழம் பதனிடும் நிலையம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாளம் பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத் திட்டம், கூமாங்குளம் கிராமம், அவுசதப்பிட்டிய, அறுகம்புல் வெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**இராசிக்குரிய ஊரின் திசைகள் எவ்வாறு அமைய வேண்டும்?**

மேடம்- வடக்கு திசை
இடபம்- மத்திய திசை
மிதுனம்- மத்திய திசை
கடகம்- தெற்கு திசை
சிம்மம்- மத்திய திசை
கன்னி-தென்மேற்கு திசை
துலாம்- வடமேற்கு திசை
விருச்சிகம்- கிழக்குதிசை
தனுசு-மேற்கு திசை
மகரம்- மத்திய திசை
கும்பம்- வடகிழக்கு திசை
மீனம்- தென்கிழக்கு திசை

*(தொடரும்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மெய்வழி அறிவு



உயிர் என்னும் இயக்க ஆற்றலுக்கு மூலமாகவும், இயக்க இடமாகவும், முடிவாகவும் இருப்பது சுத்தவெளியே. இதுவே எல்லாம் வல்ல முழு முதற் பொருள். இதன் இயக்கமே உயிர். உயிரின் படர்க்கையே மனம் என்னும் உண்மை உணர்வே அறிவின் முழுமை.

இவ்வுண்மையைத் தெளிவாக, தவத்தால் தானே அதுவாகி உணர்ந்தால் பேரியக்க மண்டலம் ஒரே ஒரு தொடரியக்கக் களமாகும். அதனின்று நான் வேறு இல்லை. மற்ற உயிரோ, பொருளோ வேறு இல்லை. அந்த முதற் பொருளே தனது இயல்பூக்கச் சிறப்பால் அனைத்துமாக விளங்குகிறது என்ற நிறைபொருள் அறிவு பூக்கும். அவ்விளக்கம் மறவாது உடலோடு உயிர் இயக்கம் நடைபெறும் வரையில், உயிர்கட்கு அறிவாலும், உடலாலும் கடமை செய்து மனிதகுல வாழ்விற்கு வழிகாட்டியாக வாழ்ந்து நிறைவு பெறுவதே மெய்வழி அறிவாகும்.

மனமே உயிராகி, தெய்வமாகி விரிந்த பேரியக்கக்கள உண்மையினை உணரும் முழுமையில் அறிவாகிறது. இது தெய்வமே மனித உருவில் அறிவின் முழுமையில் காணும் விளக்கம். இவ்விளக்கம் வேண்டிய மக்கள் அறிந்து கொள்ள விரிந்த கருத்துக்களே வேதம். இதை ஓதியவனும் ஓதியதை உணர்ந்து தானானவனும் ஞானி.

## நல்லம்மா ஞாபகார்த்த கிண்ணம்

# லக்கிஸ்ராரை வீழ்த்தியது வட்டக்கச்சி இளந்தளிர்









உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடத்திய நல்லம்மா ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகிய வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் மற்றும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியன மோதிக் கொண்டன. இதில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் ஒன்றுக்கு இரண்டு என்னும் கோல்களை அடித்து முதல் நிலையைப் பெற்று நல்லம்மா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அமரர்கள்ளான முருகேசு நல்லம்மா ஆகியோரது நினைவாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரி சளிப்பு நிகழ்வும் கடந்த 17ஆம் திகதி மாலை உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது.

மேற்படி விளையாட்டுக் கழகத் தலைவர் பா.றமாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.மோகனதாஸ் உட்பட்டோர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்திருந்தனர்.

அமரர்களான முருகேசு நல்லம்மா அவர்களின் புதல்வர்களால் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட நல்லம்மா பார்வையாளர் அரங்கும் அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தில் திறந்து வைக்கபபட்டமை குறிப்பிடத்தக்கது. (க)


உலக காசநோய் தினத்தை முன்னிட்டு யாழ்.மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தினரால் நடத்தப்படும் 9 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி.

மேற்படி சுற்றுப்போட்டிக்காக உள்ளூர் கழகங்கள்
திணைக்கள விளையாட்டுக்கழகங்கள்
விண்ணப்பிக்க முடியும்.

பதிவுக்கட்டணம் :- ரூ. 600.00
விண்ணப்ப முடிவுத் திகதி :- 28.02.2018 புதன்கிழமை
1ஆம் பரிசு :- 25,000.00
2ஆம் பரிசு :- 15,000.00

மற்றும் வெற்றிக்கேடயங்கள், பதக்கங்கள் என்பன வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.மார்பு நோய் சிகிச்சை நிலையம், பண்ணையில் பெற்றுக்கொள்ள முடியும். 28.02.2018 இற்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு
திரு.சோ.ரூபதாஸ், பொது சுகாதார பரிசோதகர்,
மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்.
077 967 2371


## அரியாலை சனசமூக நிலையத்தின் வலைப்பந்தாட்டம்

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி

### இறுதியில் பலப் பரீட்சை



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி



யாழ். பல்கலைக்கழக அணி

அரியாலை சனசமூக நிலையத்தினால் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருமதி நேதாஜி தேன் மொழியின் அனுசரணையில் நடத்தப்பட்ட மாபெரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

லீக் சுற்று முறையில் ஆட்டங்கள் நிறைவு செய்ய அரை இறுதி ஆட்டம் விறுவிறுப்பாக ஆரம்மாகியது. அரையிறுதியில் யாழ். பல்கலைக் கழக அணியினை எதிர்த்து அராலி சரஸ்வதி அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பினைத் தக்க வைத்துக் கொண்டது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து வின்சர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியினை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (க)

## அமைச்சர்கள் பலரும்...

வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த வகையில், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று அதிகாலை 3.00 மணிக்கு கட்டார் நோக்கி பயணமாகியுள்ளார். Q.R. 669ஆம் இலக்க விமானத்தில் இவர் பயணமாகியுள்ளார்.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர, அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த நேற்று வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## ஜெனிவா கூட்டத்...

உரிமையின் 37ஆவது கூட்டத்தொடரில் இலங்கை பாரிய சவாலை எதிர்கொள்ளும் என பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் விடுத்துள்ள அதிருப்தி தொடர்பில் தெளிவுபடுத்திய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த மூன்று வருடகாலமாக இலங்கைக்கு எதிராகவே தனது பாரிய அழுத்தங்கள் மற்றும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருவது ஏற்றுக்கொள்ள முடியாது. குறித்த விடயத்தில் நல்லாட்சி அரசாங்கமே முழுப் பொறுப்பினையும் ஏற்று இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பொய்யென்று ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாக உள்ளது. உலகளாவிய ரீதியில் இடம்பெறும் 37ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள 4 பரிந்துரைகள் மிக முக்கியமானதாக ஐ.நா வை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் பார்வையில் காணப்படுகின்றன. 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் பொழுது இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்கள் மேற்கொண்டார்கள் என பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. குறித்த குற்றங்கள் உண்மை என்று நிரூபிக்கும் முகமாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரசாங்கத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக தமது அனுசரணையினை வழங்கி தன் தாக்கத்தினை ஐ.நா சபையில் இலங்கை எதிர்கொண்டு வருகின்றது. இன்று இடம் பெறும் கூட்டத் தொடர் இலங்கைக்கு பாரிய சவால்களை உருவாக்குவதாக காணப்படுகின்றது. (ம)

## ஐக்கிய மக்கள்...

தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி, அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், தற்போதைய அரசாங்கம் தனது கொள்கைகளை மேம்படுத்தி, அதன் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு சிறந்த சேவை வழங்கவுள்ளது.

நாட்டு மக்களும், நாடுமே எமது அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய விடயமாகும். அந்த வகையில் இன்று (நேற்று) இடம் பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 10 அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மற்றுமொரு கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலும் விரைவில் அமைச்சரவை மாற்றம் நடைபெறும் என தெரிவித்தார். (ம)

## அரசை வீட்டுக்கு அனுப்பும்...

தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்த தேர்தல்களுக்கு முகம்கொடுப்பத ற்குத் தேவையான சகல சக்தியையும் திரட்டும் வேலைத்திட்டங்கள் குறித்து தற்பொழுது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை சுருட்டிக் கொண்டு வீட்டுக்கு அனுப்புவோம் எனும் கருப்பொருளில் இந்த வேலைத்திட்டம் அமையவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டத்தின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## இறுதி நேரத்தில்...

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பொறுப்பைத் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டார். அத்துடன், பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது போன்று கூட்டு அரசின் இரண்டாவது அமைச்சரவை மறுசீரமைப்பில் பெரியளவு மாற்றம் ஏற்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இடையே இணக்கம் காணப்பட்டது.

எனினும் சரத் பொன்சேகாவிடம் அந்த அமைச்சுப் பொறுப்பை வழங்க கடைசி நேரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துவிட்டார். அத்துடன், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சை பொறுப்பேற்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம)

## ஓமந்தையில் விபத்து...

வர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்தில் 6 பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய சிறி விக்கினேஸ்வரன் என்ற குடும்பஸ்தரே பலியாகியுள்ளார்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வந்த பட்டரக வாகனம் சைக்கிளில் சென்ற நபரை மோதியதுடன் தலையிலே பலத்த காயம் ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று காலை 8 மணி அளவில் மேற்படி நபர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை ஓட்டி வந்த சாரதி ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## காதலன் இறந்த...

காலை 9.30 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டெடுத்தனர்.

இந் நிலையில் குறித்த இளைஞனின் காதலியும் நேற்று காலை 10.30 மணியளவில் புதுக்குடியிருப்பில் உள்ள அவரது வீட்டு கிணற்றினுள் வீழ்ந்து தற்கொலை செய்துள்ளார்.

குறித்த பெண்ணின் காதலன் தூக்கில் தொங்கி தற்கொலை செய்ததன் காரணமாக இப் பெண்ணும் தற்கொலை செய்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-250,281)

## கீழே விழுந்த...

மதவாச்சியை சேர்ந்த ஜெயவர்த்தன முதியான்சலாகே நிசாந்த சந்தனுவான் (வயது 19) என்ற இளைஞனே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் மீசாலைப்பகுதியில் தண்ணீர்தாங்கி அமைக்கும் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். 110 அடி உயரம் கொண்ட தண்ணீர் தாங்கியில் கடந்த 15ஆம் திகதி குறித்த இளைஞன் 45 அடி உயரத்தில் நின்று கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்தார். பாதுகாப்பு அங்கிகளை சரியான முறையில் அணியாது நின்ற இளைஞன் தவறுதலாக கீழே விழுந்துள்ளார்.

உடலில் காயங்கள் எவையும் ஏற்படாத நிலையிலும் தலையில் பலமான அடி பட்டதனால் அந்த இடத்திலேயே மயக்கமடைந்து ள்ளார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# ஹெரோயின் போதைபொருளுடன் சிவனொளிபாத மலை யாத்திரைக்கு சென்ற 20 பேர் பொலிஸாரால் கைது

சிவனொளிபாத மலை யாத்திரைக்காக சென்றவர்களில் 20 பேர் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைபொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இந்த கைதுகள் இடம் பெற்றுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் பிலியந்தலை, குருநாகல, கண்டி, தெஹிவளை மற்றும் ராகம பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் ஹட்டன் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை , கெகிராவையில் இருந்து அகுரணை வரையில் அனுமதி பத்திரம் இன்றி கால் நடைகளை ஏற்றிச்சென்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று காலை இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது கால்நடைகளை ஏற்றி சென்ற பாரவூர்தியையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். (ம)

## அமைச்சர்களின்...

ச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இதனால், இதுவரை 47 பேரைக கொண்டிருந்த அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரவை 48 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 33 அமைச்சுக்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 15 அமைச்சுக்களும் என்ற அடிப்படையில் பிரிந்து காணப்பட்டன.

இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 24 இலிருந்து 25 ஆக அதிகரித்துள்ளது. இதில் 14 அமைச்சுக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் 11 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் சென்றுள்ளது.

பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 21 இலிருந்து 20 ஆக குறைந்துள்ளது. பிரதி அமைச்சர்கள் இருவர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் புதிதாக பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டதனால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. (ம)

## கூட்டு அரசுக்கு...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 37 ஆவது கூட்டத்தொடர் இன்று 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில், மார்ச் 16ஆம் திகதியும், மார்ச் 21ஆம் திகதியும் இலங்கை தொடர்பான இரண்டு முக்கிய விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

பூகோள கால மீளாய்வு கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கை, பெனின், பாகிஸ்தான், சாம்பியா, ஜப்பான், உக்ரேன் ஆகிய நாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் மீதே மார்ச் 16ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

அதேவேளை இலங்கை தொடர்பாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை மார்ச் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொது விவாதத்தின் தொடர்ச்சியாக இந்த விவாதம் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தொடரில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் இலங்கை தொடர்பான காட்டமான கருத்துக்களை முன்வைப்பார் என்று தகவல்கள் கூறுகின்றன.

இலங்கைக்கு இரண்டு ஆண்டு கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ள போதும், ஒரு ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையிலும், பொறுப்புக்கூறல் விவகாரங்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## கரிக்கோச்சி ரயில்...

புகையிரதம் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கல்கிசையிலிருந்து திருகோணமலைக்கு சென்ற புகையிரதம், அங்கிருந்து நேற்று கல்லோயா, அநுராதபுரம் செல்வதுடன் அங்கிருந்து இன்று 8 மணியளவில் பயணத்தை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு வரவுள்ளது. இங்கிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையத்தை அடையவுள்ளது.

மறுநாள் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இருந்து கல்கிசை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

ஜேர்மன், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுடன் குறித்த புகையிரதம் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-15)

## அடுத்த தேர்தலில்...

பின்னடைவு ஏற்பட்ட போதிலும் அடுத்த தேர்தலில் ஜெயித்துக்காட்டுவதாக சந்திரிகா குமாரதுங்க சவால் விட்டுள்ளார்.

வேயாங்கொடைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட சந்திரிகா, உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் பொதுமக்கள் தங்கள் எதிர்ப்பை அரசாங்கத்துக்கு வெளிக்காட்டியுள்ளனர்.

இருந்தும் நல்லாட்சி அரசாங்கம் இப்படியே தொடரும். இந்த அரசாங்கத்தில் இறுதி வரை பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவே தொடர்வார்.

உள்ளூராட்சித் தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும் அடுத்துவரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி வெற்றிப்பாதைக்குத் திரும்பும். கட்சியை வெற்றி பெறவைத்துக் காட்டுவோம் என்றும் சந்திரிகா சவால் விட்டுள்ளார். (ம)

## உரிமையாளர்களிடம்...

நாயக்க தெரிவித்துள்ளார்.

வன்னி பாதுகாப்பு படையணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இதனை குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் 2009ஆம் ஆண்டு இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட நிலத்தில் 76 சதவீதமான நிலம் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வருடம் 500 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதனை எதிர்காலத்தில் உரிய தனியார் உரிமையாளர்களிடம் கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக இதுவரையில் விடுவிக்கப்பட்ட நிலங்களை உரிமையாளர்கள் அடையாளப்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், முல்லைத்தீவில் போராட்டம் மேற்கொண்டவர்களினது நிலங்களும் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## போர்க்குற்றங்...

அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஏற்பாட்டுக் குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையினால் 2015 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 30/01 தீர்மானமானது - பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொள்ளாது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பின் கீழான ஒரு உள்ளகவிசாரணைப் பொறிமுறையினை நிறுவி இத் தீர்மானத்தை இலங்கை அரசு தனது சுயவிருப்பில் ஏற்றுக்கொண்டிருந்தது.

நீதியான பொறுப்புக்கூறல் விடயத்தில் அத் தீர்மானத்தில் மிகப்பாரிய குறைபாடுகள் இருந்தமையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆயினும் இலங்கை அரசு அத் தீர்மான்த்தில் உத்தியோகபூர்வமாக கைச்சாத்திட்டிருந்தது.

இருப்பினும்இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமை பேரவை 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றிய 30/01 தீர்மானத்தில் தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசு விலகியுள்ளதோடு ஐ.நாவின் தீர்மானத்தையும் உதாசீனம் செய்துள்ளது.

இத்தீர்மானம் உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்ட பின்னரும் இலங்கை ஜனாதிபதி உட்பட அரச உயர்பீடத்தினர் இத் தீர்மானத்தின் கடப்பாடுகளை வெளிப்படையாகவே நிராகரித்திருந்தனர். தமிழ் மக்களின் நோக்கில் இத் தீர்மானம் பலவீனமாக இருந்தும்கூட இத்தீர்மானத்தில் கைச்சாத்திட்டமைக்காக அப்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக 2017 மார்ச் மாதம் மேலதிகமாக வழங்கப்பட்ட இரண்டு வருட காலஅவகாசத்தின் முதல் அரைப்பகுதியில் இலங்கை அரசு பொறுப்புக்கூறல் உட்பட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு அம்சத்தையும் நிறைவேற்றவில்லை என்பதுடன் பொறுப்புக் கூறலை ஒருபொழுதும் மேற்கொள்ளப்போவதில்லை என்பதனை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற சித்திரவதைகள், அச்சுறுத்தல்கள் தொடர்பாகத் தொடரும் குற்றச்சாட்டுக்கள், காணிகள் விடுவிக்கப்படாமை, மீள்குடியேற அனுமதிக்கப்படாமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காமை, அச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் விடுவிக்கப்படாமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினருக்கான பொறுப்புக் கூறல்கள் போன்றவற்றில் இலங்கை அரசு தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகின்றது.

அத்தோடு இலங்கையின் வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் தொடர்வதும் அதன் விளைவாக தொடர்ச்சியாக கடுமையான இராணுவக்கண்காணிப்பு நிலவுவதும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை சவாலுக்குள்ளாக்குவதோடு எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் அர்த்தமற்றதாக்குகின்றது.

தமிழினத்துக்கு விரோதமான பாரிய இன அழிப்புக்கு பின்னர் தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்களும் உள்ளகரீதியான விசாரணைகளைச் செய்வதற்கான அரசியல் விருப்பத்தினைக் கூட குறைந்தபட்சமேனும் கொண்டிருக்கவில்லை என்பது தற்போது வெளிப்படையாகியிருக்கிறது. தன்னால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை அமுல்படுத்தக்கூடிய அதிகாரம் துரதிஷ்டவசமாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் இல்லை.

இந்நிலையில் - இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு உறுதிப்படுத்துவதற்காக அதன்மீது சர்வதேச சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையிலான தெரிவுகள் மற்றும் மாற்றுவழிகளை ஆராயவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சைட் அல் ஹுசைனும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.மனித உரிமை பேரவை சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறைகளில் ஈடுபட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரமற்ற சபை என்பதாலேயே இலங்கை அரசாங்கமானது தொடர்ச்சியாக அசமந்தப்போக்கினைக் கடைப்பிடிக்கின்றது.

எனவே இலங்கை அரசாங்கத்திற்கு 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசத்தில் எஞ்சியுள்ள ஒரு வருடத்தை தொடர்ந்தும் வழங்கி காலத்தை வீணடிக்காது இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் கோருகின்றோம்.

இதனை வலியுறுத்தும் வகையில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு மேற்படிக் கோரிக்கைகளை வலியுறுத்தி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை வழங்குமாறு சர்வதேச சமூகத்தை கோரும் கையழுத்துப் போராட்டத்தினைத் தமிழர் தாயகமெங்கும் நடத்தவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வானது இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதிதேடும் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)


ஜேர்மன் கப்பல் வேலைவாய்ப்பு
சிங்கப்பூர் ஹொட்டேல் வேலை
டுபாய், கட்டார், குவைத் வேலைவாய்ப்பு
சுவிஸ், அவுஸ்ரேலியா, கனடா நியூசிலாந்து, விசா ஏற்பாட்டுடன்



BUSINESS & Hotel Management
FAST TRACK - ENTRY LEVEL - DIPLOMA LEVEL
ஏற்கனவே பயிற்சி, அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு
விபரங்களுக்கு 077 36 16 798
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk
(C-1717)

Techno World
புத்தூர் சோமஸ்கந்தா அருகாமை – புத்தூர்
புத்தூரில் ஆரம்பம்....
A/L தொழில்நுட்ப பிரிவு 2018, 2019, 2020 Day Class
தொடர்புக்கு : 077 017 5346 ஆரம்பம் : 01.03.2018
● பொறியியல் தொழில் நுட்பம்
● உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
● தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
● மூன்றாவது தெரிவுப் பாடங்கள் அனைத்தும்
(C-1716)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில்நுட்ப பிரிவு
2020 மாணவர்களுக்கான
புதிய பிரிவு ஆரம்பம் 01.03.2018 காலை 8.00 மணி
அனுமதிக்கட்டணம் இல்லை
தொடர்பு:077 017 5346

சிக்கன் பிரியாணி
அறிமுகம் - Rs. 250/=
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(3027)

சகல விதமான சளி இருமல்களிற்கு சிறந்த மூலிகை இருமல் பாணி
எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி
100% இயற்கையானது



உள்ளடக்கம்
ஆடாதோடை, திப்பலி,அதிமதுரம், கண்டங்கத்தரி, சிறு தேக்கு, மிளகு, பனங்கற்கண்டு.
தொடர்ந்து பாவித்து வருவதன் மூலம் ஆஸ்மா நோய் தணிவடையும்
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தயாரிப்பு:- எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் and Co
எண் 28,26, பேரின்ப நாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண் : 0776389356, 0777153571

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK-550/=Kg
கனடா-1050/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1566)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.
றோயல் குளுக்கோஸ்



உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
ஏக விநியோகஸ்தர்கள் சிவா நறுமணப் பூங்கா 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 2567
உற்சாகம்! புத்துணர்ச்சி!! ஆரோக்கியம்!!!
PACKED BY: ROYAL Industries Colombo-13 T.P:- 077 727 7670
அனைத்துப் பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Northern Technical Institute
● Spoken / Business English.
● Soft skill & career Guidance
நுண்திறனும் தொழில்வழிகாட்டியும்
● Ms Office / ICT, NVQ 3
02 months. நேரம் 08.30மு.ப - 12.45 பி.ப
Week day & week end
For admission visit 9am - 12 on 1st /2nd Mar
Contact:
இயக்குனர்- NTI, 0776505580.
YMCA Building, 107,2/1 Kandy Rd, Jaffna. (Above Union Bank ATM & Nelson learners)
(3004)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
● ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
● அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
● கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
● நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
021 222 3536
(C-1701)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.